
# திராவிடநாடு



# கேட்டீரா சேதி!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், பல்கலைக் கழகங்களின் பொருள் உதவிக் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை போதுமானது அல்ல! அந்தத் தொகையைக் கொண்டு பல்கலை கழகங்கள் வளர்ச்சி அடைய இயலாது."

திட்டத்தில் குறைகாணுவது தானே உங்கள் வேலை என்று நம்மீது கண்டனக் கணைகள் பாயும். ஆனால் மேலே உள்ள மணிமொழியைக் கூறியது நாமல்ல; சச்சிவோத்தமராமசாமி அய்யர் (சர். சி. பி.)

அவர் சர்க்கார்செய்யும் 'எதையும்' குறை கூறுபவர் அல்லர்.

இரண்டு பல்கலைக் கழகங்களின் முன்னாள் துணைவேந்தர். அவர் கூறுகின்றார் உதவி போதாது என்று! ஆனால் சிலர் ஐந்தாண்டுத் திட்டத்தை வானளாவப் புகழுகின்றனர்!

*

மூன்றாண்டுகளுக்கு ஒன்று வீதம் மூன்று போதும் என்கிறார். எதுவா? குழந்தைகள்! வேண்டுமானால் அறுவை சிகிச்சை செய்து கொள்ளுங்கள், சர்க்கார் மருத்துவர்கள் அதைச் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். சர்க்கார் 5-கோடி ரூபாய் அந்தத்திட்டத்திற்காகச் செலவிடப்போகின்றனர். கற்றவர் மட்டும் உணர்ந்திருப்பதன்றி எல்லோரும், இதனை உணரவேண்டும் என்று வேலூருக்கு அண்மையில் ஒரூரில் நமது மாநில சுகாதார அமைச்சர் ஷெட்டி குறிப்பிட்டிருக்கிறார்.

*

பெயரிலே என்ன இருக்கிறது? ஏன் மாற்றவேண்டும்? மாற்றி விட்டால் ஏழையின் வயிறு நிறையுமா? என்று கேட்பவர்கள் கொஞ்சம் வடக்கு நோக்கிப் பார்க்கவேண்டும்; எண்ண முயல வேண்டும்.

பல ஊர்களின் பெயர்களும், தெருக்களின் பெயர்களும், அங்கு நாள்தோறும் மாற்றப்படுகின்றன. அண்மையிலும்கூட கல்கத்தாவில் இரண்டு சாலைகளின் பெயர்கள் மாற்றப்பெற்றன. இனி, ஹாரிகன் ரோடு 'மகாத்மா காந்தி ரோடு', லேன்ஸ் டௌன் ரோடு 'சரத்போஸ் ரோடு' என்று வழங்கப்படும் என்று கல்கத்தா நகரசபை தீர்மானம் நிறைவேற்றிற்று.

ஹாரிகன் ரோடும் லேன்ஸ் டௌன் ரோடும் தானே வெளிநாட்டாருக்குத் தெரியும் என்று கேட்கும் காமராசர்கள் அங்கு இல்லை!

*

பெர்சியாவில் சர்க்கார் நடத்தும் மண்எண்ணெய் நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரு 'கிணற்றில்' நாள் ஒன்றுக்கு 80,000 பாரல் எண்ணெய் சுரந்து பாய்கிறதாம்.

1 பாரல் என்பது 44 காலன் கொண்டது; 1 காலன் என்பது ஆறு புட்டி கொண்டது. 80000 பாரல் என்றால் 1,91,20,000 புட்டி மண்ணெண்ணெய் ஒரு நாளைக்கு வெளிப்படுவது.

இந்தக் கிணறு அண்மையில் தான் கண்டுபிடிக்கப்பட்டதாம். பழைய பெரிய கிணறுகளைவிட இதுதான் அதிக எண்ணெய் வெளிவிடுகின்றது என்று கூறுகின்றனர்.

*

இனிமேல் இந்த மாநிலத்தில் சிறைகளில் சமய போதகர்களுக்குப் பதிலாகச் சமூக சேவையாளர்கள் போதனை செய்வர். கைதிகளின் மனப்போக்கை மாற்ற அதுதான் வழி. மத போதகர் மார்க்கத்துறையே பேசுகின்றார். அது பயனும் அளிப்பதில்லை. ஆகவே சமூக சேவையாளர்கள் இனிமேல் சிறைக் கைதிகளின் மனதறிந்து போதனை செய்வர் என்று மத்திய பிரதேசத்தின் அமைச்சர் கன்னம்வார் சின்னாட்களுக்கு முன் ஒரு சபையில் கூறினார்.

சமய போதகர்பயன்படவில்லை தேவையற்றவர் என்றதும் சமூக சீர்திருத்தக்காரரைத் தேடி நாடிய பயன்—மக்களை நல்வழிப் படுத்துதல்—பெறுதல் கன்னம்வாருக்கு இயலுகின்றது!

ஆனால் இங்கு சமயம் சழக்கு என்றால் சீறும் சனாதனிகள் எவ்வளவோ பேர்.

*

ஒரு பூனை, வளர்த்தாலே தொல்லை மாளாது என்று நினைப்பவர் பலர். ஆனால் டர்பன் நகரில் இருக்கும் மெல்ஸ் என்ற பெண்மணி 70-பூனைகளை வளர்க்கிறார்களாம். அதுகூட வியப்பில்லை; அந்த எழுபது பூனைகளுக்கும் பெயர்வைத்து வைத்த பெயர்களையும் நினைவில் இருத்திக்கொண்டிருக்கிறார்களாம்!

"என் பூனைகள் என்ன சாதாரணமானவை என்றா நினைக்கின்றீர்கள்? அவை உயர்ந்ததராகும்" என்று பெருமையாம் அவருக்கு.

பூனைதானே என்று அற்பமாகவும் நினைத்து விடுவதற்கு இல்லை. அந்த அம்மாள் வளர்க்கும் பூனை ஒன்று 'யானை' விலைக்கும் கிடைக்கவில்லையாம். 750 ரூ கொடுத்துக் கேட்டாலும் நீண்ட மயிரும் நீல நிறமும் உடைய பூனை ஒன்றினைத் தர மறுத்து விட்டாராம்!

பூனையோ? யானையோ?

★

# ஒளி தந்தார்

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [9—9—56] தனிப் பிரதி 2 அணா [ இதழ் 10



பீடம் 155-அடி! அதன் மீது, இரும்பும் செம்பும் கொண்டு வார்க்கப்பட்ட சிலையோ 151-அடி!! தலையிருக்கும் பக்கத்தில் 48-பேர் அமரலாமாம்—கரத்தில் தென்படுகிறதே சுடரொளி, அதன்மீது ஒருவர் ஏறிநிற்கும்போது கீழிருந்து பார்த்தால் எறும்புபோலத் தோன்றுவாராம். இவ்வளவு பெரிய சிலையைக் கலை அழகுக்காக அல்ல, சுதந்திரத்தின் சின்னமாக, நியுயார்க் துறைமுகத்தில் வைத்துள்ளனர் அமெரிக்கர்கள்! சுதந்திரச்சிலை!—பெயர்மட்டுமல்ல, உருவும் திருவும், ஏனையோர் மனதில் வீரத்தையும் உணர்ச்சியையும் ஊட்டும்.

மனிதனின் சுதந்திரவேட்கையை சிலையுருவில் சித்தரித்திருக்கும் அமெரிக்க நாட்டில், நீக்ரோக்கள் அடையும் அல்லல் அதிகமாகும். இது அநீதி! ஆண்டவன் படைப்பில் யாவரும் சமம்! கருப்பனையிருக்கிற காரணத்தாலேயே, ஒருவனை நாயினுங் கேடாய், புழுவிலும் கேவலமாய், நடத்துவது அநாகரீகம் என்று வாதாடினர், ஆபிரகாம்லிங்கன். விடுதலைக்கு வழிகோலினர். கடந்த சில தினங்களுக்கு முன் நீக்ரோமாணவி ஒருத்தி டெக்சாஸ் எனும் மாகாணத்திலுள்ள ஒரு பள்ளியில் படிக்கச் சேர்ந்தாள். அப்பப்ப! அவள் பட்டிருக்கிறபாடு, சொல்லுந்தரமல்ல. இன்னொரு மாகாணமான டென்னசியில் ஒரு நீக்ரோ மாணவி, தன்னுடைய ஓய்வு நாளைக் கழிப்பதற்காக இறங்கினனும்! அவனைக் காப்பாற்றி, வெளியிலனுப்ப போலீசும் போதாமல் பெரும்படையே வர நேர்ந்ததாம். ஏனெனில், அந்தளவுக்கு நிறவெறி அரசோச்சுகிறது, அமெரிக்காவில் வான்முட்டும் மாடமாளிகைகள், முகிலைக்கிழிக்கும் மோகனக் கட்டிடங்கள், சுதந்தரச் சிலை, எல்லாம் உண்டு! அங்கே, இந்த அலங்கோலம்!!

வெள்ளை நிற வெறியரின் விதண்டாவாதக் குணத்துக்கு, வேட்டு வைத்தார் ஒரு நல்லவர்.

அவருடைய பெயரை உலகம் ஒரு நாள் திடீரெனக் கேள்விப்பட்டது! ஆச்சரியமும் அதிர்ச்சியும் கூட அடைந்தது!!

28 நிமிடங்கள்! படித்துவிட்டு அமர்ந்தார்.

உலகம் தன் கண்களை அகலமாக்கிக்கொண்டு பார்த்தது.

உலகிலேயே நாதியற்றவர்களாகக் கிடக்கும் நீக்ரோ மக்கள், கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவர் பக்கம் திரும்பினர்.

## தனது ஒரே ஒரு செயலால் ஒப்பற்றவராகி விட்டார், அவர்.

அவருடைய படத்தைத்தான் இந்த இதழ் முகப்பில் நாம் வெளியிட்டிருக்கிறோம். சென்னை கல்கத்தா டில்லி முதலிய இடங்களுக்கு வந்துவிட்டு, இந்தக் கிழமை திரும்பிச் சென்ற, அமெரிக்க சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி வாரன் என்பாரே அவர்.

வெள்ளையர், உயர்ந்த இனம். கருப்பர், தாழ்ந்த இனம். இருவருக்கும் சம இடமா! தகாது!!—என்று ஆர்ப்பரித்தது, அமெரிக்க 'அக்கிரகாரம்.' அதன் காரணமாக, வெள்ளையர் படிக்கும் பள்ளிகளில் நீக்ரோக்களையும் சேர்க்கலாமா—என்று வழக்கு ஒன்று முளைத்தது. நீதிபதி நம்மவர் ஆகவே நமக்குத்தான் சாதகமாகத் தீர்ப்புக் கிடைக்கும் என்று ஆதிக்கவாதிகள் அனைவரும் நினைத்தனர், ஆனால் வாரன், மனித நீதியைப் பெரிதென மதித்து, நீக்ரோக்களுக்கு பள்ளிகளில் நுழையக் கூடாது என்ற தடையை நீக்கினர்—அதை விளக்கி 28-நிமிடங்கள் தனது தீர்ப்பைப் படித்தார். வெள்ளையர், மிரண்டனர்! உலகம், விழித்துப் பார்த்தது!

வாரன், சரித ஏட்டில் இந்தச் செயல் மூலம், இடம் பெற்றார்.

இப்படி அவர் தடையை நீக்கியதால், அமெரிக்காவில் வாழும் நீக்ரோக்களுக்கு சிறிது ஆனந்தமும் தெம்பும் அரும்ப வழி ஏற்பட்டுள்ளது. அரசாங்கமும், சுப்ரீம் கோர்ட் உத்தரவை, அமுல் நடத்தும் பொறுப்புக்கு ஆளாகி, எங்கெங்கு இடமும் உரிமையும் மறுக்கப்படுகிறதோ அங்கெல்லாம் தலையிட்டு, தகாதவர்களைத் தண்டிக்கும் அவசியமும் உண்டாயிருக்கிறது.

இதனால், இப்போது பல வெள்ளை வெறியர்கள், தமது ஆதிக்கத்தை நாட்ட மறைமுக வழிகளைத் தேடுகின்றனரே ஒழிய, பழைய திமிர், மறையும் அறிகுறி காண்கின்றது. வாரன் வழங்கிய தீர்ப்பு கண்டு, அறிவுலகு அவரைப் பாராட்டுகிறது.

காஞ்சீபுரம்

9—9—'56

## தம்பி!

ஒரு ஓலைக்கொத்துக் குடிசைக்குள்ளே நடைபெற்றுக்கொண்டிருக்கும், அவலச் சுவைமிக்க சம்பவம் கூறுகிறேன், கேள். மாட மாளிகைகளிலே நடைபெறும் சம்பவமாக இருந்தால் கேட்கத் தித்திக்கும், இது......? என்று எண்ணி, அலட்சியமாக இருந்து விடாதே, பலப்பல ஆயிரம் குடிசைகள் பாடுபட்டால்தான் ஒரு மாளிகை; கவனமிருக்கட்டும்.

"கையைத் தூக்கவே முடியவில்லை. ஒரே குத்தல், குடைச்சல். நானும் எப்படி எப்படியோ சமாளித்துப் பார்க்கிறேன், முடியல்லே...... பிராணனை வாட்டுது......"

"பாரடி அமமா, உங்க அப்பன், சுளுக்குக்கு இந்தக் கூச்சல் போடறதை கை சுளுக்கிக்கிட்டுதாம், அதுக்கு உசிரு போகுது, தாளமுடியல்லேன்னு ஒரே அமக்களம் பண்ணுற கூத்தைப் பாரு......"

"பெரிய கிராதகடி, நீ. நான் என்ன, துடியாத் துடிக்கறேன். மூணுநாளா நான் பல்லைக் கடிச்சிக்கிட்டு நோவை பொறுத்துக்கிட்டு இருந்தேன—என்னாலேயும் — வலி தாளமுடியாததாலே கூச்சல் போடறனே தவிர, வேணும்னு வேஷமாப் போடறேன்......"

"இருக்கும்மா! அப்பா எப்பவும், எப்படிப்பட்ட வலியையும் பொறுத்துக்கிட்டு இருப்பவராச்சே. பாவம்! என்னமா வலிக்குதோ என்னமோ..."

"அவ மனம், துளியாவது பதறுதான்னு பாரேன் பொண்ணு, இவளுக்கு மண்டைக்குத்தல் வந்துவிட்டா, போடற கூச்சலிலே, ஊரே திரண்டு வந்தாடும்......"

"சும்மா இருங்க........ எந்தக் கை வலிக்குது........ சோத்துக் கையா......? எந்த இடத்திலே......? தோள்பட்டையாண்டையா......? முதுகுப்பக்கமாக்கூட வலிக்குதா......? சுளுக்குத்தான்...... வேறே ஒண்ணும் இல்லை......"

"எலும்பு கிலும்பு முறிஞ்சி போயிருக்குமா, இம்மாம் வலி இருக்குதே......"

"ஏம்பா! பச்சிலை வைத்யரண்டை போய்க் காட்டினா, நல்லதாச்சே..."

"அடி ஏண்டி, பச்சிலையும் உலர்ந்த இலையும்...... நீ போயி, நம்ம கொல்லைமேட்டுக் கொளத்தாங்கரையிலே, களிமண்ணு இருக்கு பாரு, அது ஒரு நாலு கை கொண்டா......"

"களிமண்ணைக் கொண்டாந்து......?"

# ★ சந்தனம் அரைத்த கரம்!

"களிமண்ணு, சஞ்சீவியாச்சே! சுளுக்கு, பிடிப்பு, வீக்கம், இதுக்கெல்லாம், களிமண்ணை குழைச்சி வலிக்கிற இடத்திலே தடவினு, அது உலர உலர, வலி இருக்கற இடம் தெரியாமே போயிடும்......"

"வெறும் களிமண்ணு?"

"ஆமாம்; நீ போடி; உங்க அப்பாவுக்கு எதலேயும் நம்பிக்கை இருக்காது. களிமண்ணுபோட்டுகிட்டு. வலியைக்கொஞ்சம் பல்லேக்கடிச்சிகிட்டு பொறுத்துகிட்டு, ராப்பொழுது 'ஓட்டிவிட்டா, பொழுது'விடிஞ்சதும் சுளுக்கு சொல்லாமே கொள்ளாமே ஓடிப்போயிடும்......"

"எம் புள்ளே! நெஜமாத்தான் சொல்றியா? இல்லே, என்னே சும்மா அலங்கோலம் பண்ண வேணும்னு எண்ணமா?"

"அம்மா! விளேயாட்டுத்தனமா எதாச்சும் செய்துட்டு வலி, அதிகமாயிடப்போகுது ........"

"ஆமாம், எனக்கு வயசு அஞ்சு, நான் விளேயாடறேன் ........அடி, ஏண்டி! அந்த ஆகாவழியோட கூடிகிட்டு, கதை பேசறே. போயி, களிமண்ணு கொண்டுவா......வர வழியிலே, எருக்கம் செடி இருக்கும், பத்து இலேயும் கிள்ளிகிட்டுவா......"

"எருக்கம் பால் தடவினு புண்ணுயிடும்னு சொல்லுவாங்களே......"

"கொழந்தைப் புள்ளெக்குக் கூடத் தடவலாம், புண்ணு ஏன் ஆவுது? போடி, இருட்டிவிட்டா, அந்தப் பக்கம், கன்னிம்மா கோயில் சர்ப்பம் உலாத்தும்......"

"ஆமாம் பொண்ணு, பார்த்துப்போ..."

"அது என்ன பண்ணும்? கன்னிம்மா! கன்னிம்மான்னு மூணு தடவை சொன்னு, மாயமா மறைஞ்சிவிடும்..."

"எதுக்கும் ஜாக்ரதை வேணும்...போயிட்டு சுருக்கா, வாம்மா. என்ன இழவெடுத்த சுளுக்கோ தெரியல்லே, உசிரை வாட்டுது..."

*

களிமண் தடவி, நோய், நொடியிலே போய்விடும் என்று உபசாரம் பேசி அவனே அன்றிரவு உறங்கவைக்க தாயும் மகளும் வெகுபாடுபட்டனர்; காலேயில் எழுந்ததும், வலி அதிகமாயிற்றே தவிர குறையவில்லே.

'அப்ப இது, நோய்அல்ல;கன்னியம்மா குத்தம்' என்று தீர்ப்பளித்துவிட்டு, கோயில் சுற்றக் கிளம்பிவிட்டாள் கோவிந்தம்மா. கந்தப்பன், வேலேக்குப் போகமுடியாதே, என்ன கோபம் செய்து கொள்வார்களோ, வேறு ஆளே வைத்து விடுவார்களோ என்று பயந்தான்: ஆனால் என்ன செய்வது, இப்படிப் பயந்துபயந்துதான், வலி இருக்கும்போதே அதைப் பொருட்படுத்தாமல், மூன்று நாட்களாக வேலேக்குச் சென்று, வலியை அதிகமாக்கிக்கொண்டான்.

"ஏன், அந்தச் சோம்பேறி, இன்னேக்கு மட்டம் போட்டுட்டுதா...?"

என்று ஒரு குரலும், அதற்கு ஆதரவாக,

"இப்பத்தான் இதுகளுக்கெல்லாம் திமிர் தலேவிரித்து ஆடுதே"

என்று வேருேர் குரலும் கிளம்புவது, கந்தப்பனுக்குக் கேட்பது போலவே இருந்தது. இருந்தாலும் பரவாயில்லே, தேவையைவிட அதிகமாகவே சரக்கு தயாரித்து வைத்தாயிற்று; இன்று ஒரு நாள் வேலே செய்யாததாலே காரியம் குந்தகப்பட்டுவிடாது என்றதைரியத்தில் கந்தப்பன் இருந்தான். தைலம் வாங்கிவரச் சொல்லி தன் மகள் முத்தம்மாளே அனுப்பிவிட்டு அம்மா! அப்பா! அம்மம்மா! ஐயயோ......! அடடடா!—என்று முனகியபடி படுத்துக்கிடந்தான்.

சுளுக்கு, எலும்பு முறிவு ஆகியவைகளுக்குப் பச்சிலேத் தைலம் தடவிக் குணப்படுத்தும் பரம்பரை ராஜ வைத்யர் ராமண்ணு வீட்டில் இல்லே. அன்று செந்திலாண்டவன் கோயிலில் முருகனுக்குச் 'சந்தனக் காப்பு' உற்சவம், பிரமாதம், அதைத் தரிசிக்கப்போயிருந்தார் வைத்தியர்.

முருகனுக்குச் சந்தனக் காப்பு உற்சவம் தடபுடலாக நடைபெற்றது.

பல ஆயிரக்கணக்கான பக்தர்கள், கண்டுகளித்தனர்.

மேளம், வாணவேடிக்கை எல்லாம், செலவு பற்றிய கவலேயற்ற முறையில் ஏற்பாடாகி இருந்தது.

'சந்தனக்காப்பு' சேவை முடிந்ததும், சந்தனம் பக்தர்களுக்குத் தரப்பட்டது—விலேகொடுத்து அல்ல, காணிக்கை செலுத்தி, சந்தனம் பெற்றுக்கொண்டனர்.

அத்தரும் பன்னீரும், அரகஜாவும் பிறவும்கலந்துதான் பார், என் செந்திலாண்டவன் மீது அப்பப்பட்ட சந்தனத்துக்கு உள்ள மணம், இருக்கிறதா என்று பார்! இருக்கவே இருக்காது! சந்தனக் காப்பு முடிந்ததும், தனியாக ஒரு தெய்வீக மணம், சந்தனத்துக்கு ஏற்பட்டுவிடுகிறது! மல்லிகை முல்லே, மருவு மருக்கொழுந்து ரோஜா, மகிழம்பூ, மனோரஞ்சிதம், எனும் புஷ்பங்களிலே எல்லாம் கிடைக்கும் 'வாசனே' அவ்வளவும் ஒன்ருகச் சேர்ந்து, விட்டதுபோலிருக்கும். செந்திலாண்டவன் கோயில் சந்தனக்காப்பு உற்சவம் என்ருல் தேசமுழுவதும் தெரியும்!—என்றெல்லாம் பக்தர்கள் பேசிக் கொண்டனர்.

எலுமிச்சை அளவு, விளாங்காய் அளவு, குண்டுமணி அளவு, உருத்திராட்சைக் கொட்டை அளவு, இப்படிப் பக்தர்கள் அவரவர் செலுத்தும் காணிக்கைக்குத் தக்கபடி, சந்தனப் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

தெய்வீக மணம் பொருந்தியது என்று நம்பப்பட்ட இந்தச் சந்தனம் முழுவதும், குடிசையிலே குமுறிக்கொண்டிருக்கிருனே கந்தப்பன், அவன் அரைத்தெடுத்துக் கொடுத்தது!

செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அறைத்துக்கொடுக்கும் 'ஊழியக்காரன்' இந்தக் கந்தப்பன.

பல ஊர்களிலிருந்தும் தரிசனத்துக்கு வரும் பக்தர்கள், பகவத் பிரசாதம் என்று பயபக்தியுடன் காணிக்கை செலுத்திப் பெறுவதற்காகத் தயாரிக்கப்பட்ட சந்தனம் இந்தக் கந்தப்பன், கை வலிக்க வலிக்க அறைத்தெடுத்துக் கொடுத்தது.

சந்தனக்காப்பு உற்சவத்தை முன்னிட்டு, கந்தப்பன், இரவு பகலாகச் சந்தனம் அறைத்தெடுத்துக் கொடுத்துத்தான், கை சுளுக்கிக்கொண்டுவிட்டது.

மார்பில் பூசிக்கொண்டும், நெற்றியில் பொட்டாக வைத்துக்கொண்டும், சந்தனம் 'கமகம'வென்று இருப்பது குறித்துக் களிப்புடன் பேசுகிறார்கள், பக்தர்கள்!

கன்னத்தில் தடவி மகிழ்பவரும், மார்பிலே பூசிக்கொண்டு மந்தகாசமாக இருப்போரும், மாளிகைகளிலே உள்ளனர்.

உண்ட ருசியான பண்டம் 'ஜீரணம்'ஆவதற்காகப்பூசிக்கொண்டு, முருகா! கடம்பா! கந்தா! வடிவேலா! — என்று கூறிப் புரண்டுகொண்டிருக்கிறார்கள் சில பக்தர்கள். கோயில் அர்ச்சகர், தனக்கு வேண்டியவாளுக்காகப் பிரத்யேகமாக, வெள்ளி வட்டிலில் சந்தனத்தை வழித்தெடுத்து வைத்திருக்கிறார்; வத்சலாவோ, சபலாவோ, அபராஞ்சிதமோ அம்சாவோ, அதன மணம் பெற்று மகிழப்போகிறார்கள்.

காட்டில் கிடைக்கும் மரம்' —அதிலே கவர்ச்சியூட்டும் மணம்! —அரைத்தெடுத்திட உழைப்பாளிக்கு முடிகிறது. சீமான்களின் மாளிகையாக இருந்தால் கூட கந்தப்பன், இவ்வளவு கடினமாக உழைத்திருக்க மாட்டான்; கை சுளுக்கு ஏற்பட்டிருந்திராது. செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அரைத்துக் கொடுப்பது என்பது 'புண்ய காரியம்' என்பது அவனுக்குக் கூறப்பட்டது.

"கேவலம் கூலிக்காக, சோற்றுக்காகவாடா, கந்தப்பா, நீ வேலை செய்கிறாய்? சகல சித்திகளையும் அருளவல்ல,முருகப்பெருமானுக்கு நீ செய்யும் கைங்கரியம் இது—ஊழியக்காரனல்ல நீ, பக்தன், தெரிகிறதா, எனவே, கஷ்டத்தைப் பாராதே, காசு எவ்வளவு தருவார்கள் என்று கேளாதே, பகவானுக்கு நாம் சேவை செய்கிறோம் என்ற எண்ணத்தோடு வேலை செய், வேல்முருகன், உனக்குத் தக்க சமயத்தில் தக்க விதமாக அருள் பாலிப்பார், என்று திருப்புகழ் பஜனைக் கூடத்தாரும், கோயில் தர்மகர்த்தாவும் கூறினர்; அவர்களெல்லாம் மெத்தப் படித்தவர்கள், அவர்கள் கூறுவது சரியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை கந்தப்பனுக்கு. எனவே தான், கை தழும்பேறியதைக் கவனியாமல், சுளுக்கு ஏற்பட்டு உயிர் துடிக்கும் விதமான வலி உண்டாகும் அளவுக்கு, சந்தன அரைப்பு வேலையைச் செய்திருக்கிறான்.

முருகனுக்குச் சந்தனக் காப்பு நடைபெற்றது, சன்னதியே நறுமணம் பெற்றது.

பக்தர்கள் சந்தனப் பிரசாதம் பெற்றனர்—மகிழ்ந்தனர், கோயில் நிருவாகத்தினர், வரவு செலவு கணக்குப் பார்த்தனர்-நல்ல ஆதாயம், எனவே, மிகுந்த மகிழ்ச்சி அவர்களுக்கு. அவர்களின் இல்லங்களிலெல்லாம் சந்தன மணம் கமழ்ந்தது! கந்தப்பன் வீட்டிலேயோ, எருக்கம்பால் வாடை மூக்கைத் துளைத்தது. கந்தப்பன் அரைத்துக் கொடுத்த கலவைச் சந்தனம், மலருடைய உடலுக்கு அழகும் மணமும் அளித்தது. கந்தப்பன் உடலில், களிமண் பூசப்பட்டிருக்கிறது, எருக்கம்பால் தடவி இருக்கிறார்கள்; மூதாட்டி ஒருத்தி சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள், "இதெல்லாம் எதுக்கு? பசுமாட்டுச்சாணியை கொதிக்கவைத்துத் தடவு, நோய் பட்டுன்னு விட்டுப்போகுது பாரு" என்று.

இந்திய சர்க்காருக்கும் தம்பி! மக்கள், கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டு, கை சுளுக்குக்கு எருக்கம் பால் தேடிடும் கந்தப்பன் போல, தங்கள் வாழ்க்கை வசதிக்கு, தகுந்த அளவும் வகையும் பொருள் கிடைக்காமல் திண்டாடித் தேம்புகிறார்கள்.

சந்தனம் அறைத்துக் கொடுத்ததால் உண்டான வலி தீர்ந்தால் போதும் என்ற நிலையில் கந்தப்பன் இருப்பது போல, நாளுக்கு நாள் ஏறிப் பாரமாகிக்கொண்டு வரும் வரித் தொல்லையைத் தாங்குவதற்காவது வலிவு வேண்டுமே, அதை எப்படிப் பெறுவது என்று ஏழை மக்கள் ஏங்கித் தவித்துக் கிடக்கிறார்கள்.

சந்தனக் காப்பு உற்சவம், பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டும் என்று பக்தர்கள் பரவசத்துடன் கூறுவதுபோல, இந்திய சர்க்கார், மந்திரிகளின் கௌரவம் உயர்த்தப்படுவதற்கும், மதிப்பு பெருகுவதற்கும் செலவிடும் தொகையையும் வகையையும் கண்டால், சுயராஜ்யத்தின் 'சுந்தர சொரூபம்' தெரிகிறது என்று தெந்தினம் பாடிடப் பலர் உளர்.

கேவலம் கூலிக்காகப் பாடுபடுவதாக எண்ணிக்கொள்ளாதே, இது பகவத் கைங்கரியம், எனவே 'விசுவாசத்துடன்' சேவை செய்ய வேண்டும், என்று கந்தப்பனுக்கு உபதேசிக்கப்படுவது போலவே, அன்னிய ஆட்சியின் போது, வரி கொடுக்க, உங்கட்கு, மனக்கசப்பும் கொதிப்பும் இருப்பது சகஜம்; இப்போது அப்படி இருக்கக் கூடாது; இது சுயராஜ்யம்; எனவே முகத்தைச் சுளிக்காமல் பாரம் என்று குமுறாமல், முடியவில்லையே என்று கூறிக் கண் கசக்கிக்கொள்ளாமல், கேட்கும் வரிப்பணத்தைக் கொடுக்கவேண்டும் அதுதான் தர்மம், அதுதான் தேசபக்தி, என்று உபதேசிக்கும் காங்கிரஸ் தலைவர்கள், உரத்த குரலில் பேசுகிறார்கள்.

களிமண் தடவினால் வலி போகுமா, எருக்கம் பாலடித்தால் சுளுக்கு நீங்குமா என்று கந்தப்பன் பரதவிப்பது போலவே, என்னென்ன பாடுபட்டால் பிழைக்கலாம், எந்தெந்தத் தேவைகளைக் குறைத்துக்கொள்ளலாம், என்னென்ன துணைத் தொழில்கள் தேடலாம், கூடை முடைவோமா,

(15-ம் பக்கம் பார்க்க)




பெண்கள் — ஆண்களுக்கு அடிமையாகக் கிடந்து அவதியும் துன்பமும் உறுவதற்கு மட்டுமே ஏற்றவர்கள்; ஆண்களின் அறிவை மயக்கித் தீய வழி செலுத்திவிடும் இயல்புடையவர்கள்—மாயப் பிசாசம்—என்றெல்லாம் இடைக்காலத்தில் தூற்றப்பட்டனர். அந்தக் கொடுநிலை இந்தத் தமிழ் மண்ணின் இயற்கை நெறி அன்று. தமிழ் மண்ணில் வேற்று நாட்டு மொழியோ, பண்போ, பரவாமல் தமிழ்ப் பண்பு தனித் தன்மையுடன் விளங்கிய நாட்களில் ஆணுக்கு இருந்த உரிமையும், உயர்வும் பெண்ணுக்கும் சமுதாயத்தில் இருந்து வந்தது. ஆனால் வடவருடைய கூட்டுறவு ஏற்பட்ட பிறகுதான் 'பெண் அடிமை' என்ற புன்மை நெறியும் தமிழகத்தில் ஏற்படலாயிற்று.

அந்தப் புன் நெறியைப் பின்பற்றியவரானதால்தான், தமிழரின் பெரு நூலுக்கு உரை எழுதும் போது பரிமேலழகர்,

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்.**

என்னும் குறளில் கேட்ட என்ற சொல்லிற்கு வலிந்து பொருள் கூறிச் சென்றார்.

தான் பெற்ற மகன் கற்றவன், நல்லவன் எனத் தானே கூறிக் கொள்ளுதல் யாருக்கும் சிறப்பல்ல. காக்கையும் தன் குஞ்சைப் பொன் குஞ்சு எனும் என்று சொல்லி எள்ளுவர். அதனால் நம்முடைய பொருளையோ பிறவற்றையோ மற்றவர் புகழ்வதுதான் ஏற்புடையதும் இயல்புடையதும் ஆகும். மேலும் நம் பொருளின் நன்மையை நாமே உணர்ந்து மகிழ்வதைவிட அதனை மற்றவர் கண்டு புகழ்வது தான் மிக்க மகிழ்ச்சியைத் தருவதாகும்.

ஆகவே தன் மகனைச் 'சான்றோன்' எனத் தானே உணர்ந்து மகிழ்வதைவிட பிறர் வாயால் அவன் சான்றோன் என்று கூறக் கேட்டல்தான் எந்தத் தாய்க்கும் மகிழ்ச்சியைப் பெருக்கும். இந்த அடிப்படை உண்மையை மனத்துட் கொண்டு வள்ளுவர் 'கேட்ட' தாய் என்று எழுதினாராக, அவர் எழுத்துக்கு விளக்கம் சொன்ன

**மா. கி. தசரதன்**

பரிமேலழகர் 'பெண் இயல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாய் என்று கூறினார்' என்றார். இயல்பால் தானாக அறியாதவள்—அறியமாட்டாதவள், அறியக் கூடாதவள் என்பது பெண்ணடிமை பேசும் வடவர் கொள்கை. ஆனால் தமிழர் கொள்கை அது வன்று.

ஒத்த உரிமையுடன் சமுதாயத்தில் சிறந்த இடத்தைப் பெற்றுச் சீருடன் இருந்தனர் மகளிர் என்பதற்குப் புறநானூற்றில் பல சான்றுகள் காணப்படுகின்றன.

புறநானூறு பெரும்பாலும் ஈகை, போர், போன்ற புறப்பொருள்களைப் பற்றிப் பேசும் நூல் என்றாலும், அதில் மகளிரைப் பற்றியும் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. மகளிர் அணிந்த அணிகலன்கள், புனைந்த ஆடைகள், நடந்த நெறிகள், வாழ்ந்த முறைகள் இவை பற்றி எல்லாம் அந்நூலில் பல குறிப்புக்கள் கிடைக்கின்றன.

மகளிர் கற்றல் கூடாது என்று தடுத்து, அவர்களை அறியாமை இருளில் கிடக்கச் செய்தது வடவர் நெறி. கற்றறிந்த பெண்டிரைப் பற்றி நாம் வடவர் கதைகளிலும் கேட்டறிய இயலுவதில்லை. ஆனால் தமிழர் நெறியில் பெண்பாலர் கல்வி கற்றதோடன்றிக் கவிபாடும் ஆற்றலும் பெற்றிருந்தனர் என்று அறிகின்றோம்.

பதினைந்து பெண்பாற் புலவர்கள் பாடிய பல பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன, எனின் தமிழகத்துப் பெண்கள் பெற்றிருந்த உயர்வையும் சிறப்பையும் நாம் ஒருவாறு உணரலாம். அவர்கள் பாடிய பாடல்களில் காணப்படும் கருத்துக்கள் சீரியவையாய் சிந்தைக்கு விருந்தாய் அமைகின்றன. அந்தப் பாடல்களில் இலக்கிய நயம், சொல் பொருள் சுவைகளுடன் கூடி மிளிர்கின்றன. அந்த அளவிற்குக் கற்றவராய், அறிந்தவராய், சான்றோராய்த் தமிழ் நாட்டுப் பெண்கள் வாழ்ந்தனர் என்று புறநானூறு பேசுகின்றது.

பெண்பால் புலவர்களுள் அரசி போல் விளங்கிய ஔவையாரைத் தமிழ் உலகம் நன்கு அறியும். அந்த மூதாட்டி பாடிய முப்பத்து மூன்று பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. அவை வீரம், காதல் போன்ற சுவைகளைப் பேசுவனவாய் வாழ்க்கையில் கொள்ளத் தகும் தேர்ந்த பல உண்மைகளை உரைக்கின்ற பாடல்களாய் அமைந்துள்ளன.

சங்க காலத்து வாழ்ந்த ஔவையாரொடு யாதும் தொடர்பில்லாத, இருக்க இயலாத, பல புனைகதைகளை இணைத்து அவர் பெயருக்கும் கவிதைகளுக்கும் இழுக்குத் தேடுவார்போல் சிலர் முயன்ற முயற்சி கண்டனத்துக்கு உரியதாகும்.

ஔவையார் சிறந்த கவிதை

உள்ளம்படைத்த பெண்மணி. எளிய சொற்களில் இனிய முறையில் உணர்ச்சிகளை வடிக்க வல்லவர். அதியமான் நெடுமான் அஞ்சி இறந்தானாக, அவன் பண்புகளைப்பற்றிப் பாடியுள்ள "சிறிய கள்பெறின் எமக்கு ஈயும் மன்னே" என்று தொடங்கும் பாடல், உறுதி கொண்ட உள்ளத்தையும் உருக்கும் தகைமைத்து ஆகும்.

ஒரு புலவர் மற்றொரு புலவரைப் பாராட்ட மாட்டார், அவர்களுக்குப் 'புலமைக் காய்ச்சல்' மிகுதி என்ற அவச்சொல் தமிழ்ப் புலவர்களுக்கு உண்டு. ஆனால் ஔவையார் பல இடங்களில் பிற புலவர்களின் சிறப்பைப் பாராட்டியுள்ளார். புறநானூற்றில் 99-ஆம் செய்யுளில் பரணரின் சிறப்புரைப்பது ஒரு எடுத்துக்காட்டு.

பொன்முடியார் எனும் பெண்பாற் புலவர் பாடிய பாட்டு ஒன்று பண்டைத் தமிழ் மகளிரின் கடமை உணர்ச்சியைப் புலப்படுத்துகின்றது. மக்களைப் பெறுதல் மட்டும் மகளிர் கடமையாக இராமல், பெற்ற பிள்ளைகளைப் பேணிவளர்த்தல் சிறந்த கடமை என்பார் அவர். இளமையில் நல்ல எண்ணங்களை ஊட்டி நல்ல முறைகளைச் சொல்லிக் குழவிகளை வளர்த்தல் சமுதாயத்தில் நல்லவர்கள் பெருகுவதற்கு அடிகோலும். தாய்மாருக்கு வெளி உலகக் கடமைகள் இல்லாமல் இருக்கும்போது, அதுவே பெருங் கடமை எனலாம். அதனைத்தான் பொன்முடியார் தம் பாடலில் 'ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே' என்று கூறுகின்றார்.

ஈன்றுவிடுதலோடு கடமை தீர்ந்துவிடாமல் பேணி வளர்த்தலிலும் தொடருகின்றது என்று தாயர் உணர்ந்திருந்தமையால் வீரமிக்க இளங் காளைகளைப்பற்றிய சேதி, பல நமக்கு கிடைக்கின்றன.

"நேற்றுப் போரிலும், முன் நாள் போரிலும் தமையனும், கணவனும் மாண்டாராக பின்னும் போர்ப்பறை ஒலிக்கக் கேட்டு வீரம்மிக்குத் தன் இளமைந்தன் கையில் வேல் கொடுத்துச் செருமுகம் நோக்கிச் செல்க"

என்று ஒரு தாய் கூறினள் என்ற செய்தியை அறியும்போது நமக்குத் திகைப்பு மேலிடுகின்றது. 'இயலுமோ?' என்று ஐயுறுகின்றோம். "ஏற்புடையதுதானா?" என்றும் ஆராய்கின்றோம். ஏற்புடையதா இல்லையா என்பதைவிட அந்த இதயத்தின் திண்மையையும் வல்லமையையும் கண்டு வியத்தல்தான் பழந்தமிழ்ப் பெண்ணின் வீரம் நமக்கு காட்டுகின்றது. நமக்கு அந்தச் செய்தியைச் சொல்லும் புலவரே அந்தச் செயலைக் கண்டு மருண்டவர்போல் 'கெடுக சிந்தை' என்றுதான் பாடலையே தொடங்குகின்றார்.

"தன் மகன் எங்கே இருக்கிறான் என்ற செய்தியே அறியாளாய், புலிகிடந்த குகைபோல், அவன் கிடந்த இடம் இது என்று தன் வயிற்றைக்காட்டி, எங்கேனும் போர்க்களத்தில் காணப்படுவான் போய்ப்பார்" என்று கூறிய தாயரை நாம் புறநானூற்றில் காணுகின்றோம்.

வீரம் செறிந்த தமிழ் நாடு பழந் தமிழகத்து மகளிரால் படைத்துக் காக்கப்பட்டதே ஆகும்.

தமிழகத்துப் பெண் வீரத்திற்கு அடிப்படையான மானவுணர்ச்சி உடையவளாய், விளங்கினமைக்கு, காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பால் புலவர் சான்று தருகின்றார். தன் மகன் 'படை அழிந்து மாறினன்' என்று பலர் கூறக் கேட்டவுடன், மனங் கலங்கி "அது உண்மையாயின் அவன் பாலுண்ட பகுதியை சிதைத்துக்கொள்வேன்" என்றுசூள் உரைத்து, வாளுடன் போர்க் களம் சென்று இடந்த பிணங் களுள் தன் மகன் உடலைத்தேடி அவன் மார்பில் புண்ஏற்று மடிந்ததைக் கண்டு 'ஈன்ற ஞான்றினும் பெரிதும் உவந்தாள்' என்று அப் புலவர் பாடலில் காணக் கிடக்கின்றது.

கொடுமை நிறைந்த செயல் போல் காணப்பட்டாலும் குடியின் மானம் காக்கப் பெறுதல் வேண்டும் என்று அந்த மறக்குடி மகள் எண்ணிய எண்ணத்தினையே நாம் வியக்கின்றோம் வேறுபல வீரப் பாடல்களையும் புறநானூறு காட்டும். போர் பகையைக் கண்டு அஞ்சாத அவ்வீர மகளிர் நெஞ்சம், வறுமையைக் கண்டும் கலங்கியது இல்லை.

பண்டைத் தமிழ்ப் புலவர்களுடன் இடையறாத தொடர்பு கொண்டு இணைந்து நின்றது வறுமை எனக் கண்டுள்ளோம், அவ்வகையில் வறுமையில் வாடிக் கிடக்கையிலும், புலவர்கள் குடும்பத்தில் அமைதி நிலவியது அவர் களுடைய மனைவியரால்தான். இல்லத்தில் அமைதி இன்றேல் என்ன

### விசித்திரம்!

பெரம்பூர்! பெரம்பூர்!!—என்று பிரமாதமாகப் பேசப்படுகிறது. அங்கேயுள்ள இரயில்வே 'கோச் பாக்டரி'யின் அபார சாதனைகளைப் பற்றியும், நிர்வாக அதிகாரியாக இருப்பவரையும் குறித்து, 'அந்த இடத்து' ஏடுகள், எழுதுவது ஏராளம்.

ஆனால் அங்கு கட்டப்படும் வண்டிகளுக்கு ஆகும் செலவு மிக அதிகமாகும்.

டில்லி பார்லிமெண்டில் கேட்கப்பட்ட கேள்விக்கு இவ் வண்ணம் பதிலளிக்கப்பட்டிருக்கிறது

பெரம்பூரில் கட்டப்படும் ஒரு 'வண்டி'க்கு ரூ. 2,40,000 ஆகிறதாம்! ஆனால் பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் ப்க்டரியில் அதே வண்டி ரூ. 1,40,000 செலவில் தயாராகிறதாம்!!

இந்த விசித்திர விரயத்தைச் சர்க்கார் அறியாதது ஏனோ?

கற்றும் என்ன அறிந்தும் ஏது செய்ய இயலும்? 'இல்லவள் மாண்பு ஆனால் இல்லது என்?' என்று கேட்டு வீட்டரசியால்தான் நிறைவும் குறைவும் தோன்றும் என்று வள்ளுவர் கூறினர். பண்டைத் தமிழ்ப் புலவர்களின் மனைவியர் வறுமையிலும் கலங்காது, வந்த துன்பத்தையும் ஏற்றிருந்து, இன்முகம் காட்டி வாழ்ந்ததினால்தான் அந்தப் புலவர் பெருமக்கள் இலக்கியத் தொண்டில் ஈடுபட்டு இன்பம் காண இயன்றது.

வறுமையைக் கண்டு அடங்கிக் கிடக்க வேண்டும் என்பது அல்ல· வறுமையால் மனம் வாடாமல் இருந்தனர். இல்லத்து தலைவர்களைப் பழிக்காமல் தூற்ருமல் இருந்தனர்; பொறுமை மிக்கவர்களாய் விளங்கினர் என்பதே ஈண்டுகாண வேண்டியது.

பெறவேண்டும் பண்புகள் எல்லாம் பெற்று,வாழவேண்டிய முறையில் வாழ்ந்து சிறந்தனர் பெண்டிர் என்ற குறிப்புக்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. அந்த நூலில் பல இடங்களில் அவர்கள் பாடல்கள் நிறைந்து நூலுக்கு மணம் தருகின்றன.

அவ்வகையில் அறிவும் பண்பும் கொண்ட மகளிரைப் படைத்திருப்பதுதான் சமுதாய வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்வதாகும். பெண்ணைப் பற்றித் தவருன எண்ணங்கள் எழுந்து அவர்களை அடுப்படிக்கு மட்டுமே அரசிகளாக ஆக்கியதும் சமுதாய வீழ்ச்சிக்கு ஒரு காரணம் ஆகும். எழுச்சி வேண்டும் இனம் இருபாலர்க்கும் ஒத்த உரிமையை வாழ்க்கையைத் தருவதாக அமைதல் வேண்டும்· அத்தகையதோர் அமைப்புக்குப் புறநானூற்றில் காணப்படும் மகளிர் வழிகாட்டிகளாவர் எனலாம்.

★

# கடாரம் கண்ட தமிழர்

'கடாரம் கண்ட தமிழர்; கடாரம் வெற்றி கொண்டவன் இராஜ இராஜ சோழன்' என்ற இலக்கிய, வரலாற்று வரிகளுக்குச் சான்று கிட்டாவில் கிட்டிவிட்டது.

இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தென் கிட்டாவில் தமிழர்கள் குடியேறி வாழ்ந்தனர் என்ற உண்மையை தென் கிட்டாவில் காணப்படும் தமிழர்களின் ஆறு பெரும் குடியேற்றப் பகுதிகள் அறிவிக்கும். இதனை மலாயாப் பல்கலைக் கழகப் புதை பொருளாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். மலாயா வரலாற்றில் மிகப் பெரிய கண்டுபிடிபபு இது.

தென்கிட்டாவில் புதைபொருள் ஆய்வு மேற்கொண்டு அண்மையில் மலாயாப் பல்கலைக் கழகப் புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் புதை பொருள் ஆராய்வுக் கழக ஆக்டிங் நில டைரக்டர் திரு. கே. ஜி. திரகோனிங் தலைமையில் பிரயானம் செய்தனர். அவர்கள் நேற்று தமிழர்களின் பெருமைக்குரிய வரலாற்று உண்மையை அறிவித்தார்கள்.

தென் கிட்டாவில், மூடா ஆற்றுக் கீழ்ப் பகுதியில் மெர்போக்கிற்கும் மூடாவிற்கும் இடையில் உள்ள நிலப்பாங்கில் அந்த இந்தியர் குடியேற்ற ஸ்தலங்கள் இருந்தனவாக அவர்களால் மதிப்பிடப் படுகின்றன.

இந்தியர் [தமிழர்] வாழ்ந்த இப் பகுதிகள் மலாயாவிலேயே மிகப் பழங்காலத்தனவாயுள்ள பகுதிகளாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிருர்கள்.

எந்த இடத்தில் கணக்காக அந்த இந்தியர் வாசஸ்தலங்கள் இருக்கின்றன என்பதற்கான விவரம் 'பரம இரகசியமாக' வைக்கப் பட்டுள்ளது என்று அக்குழுவின் தலைவர் திரு. திரகோனிங் கூறினர். அக்குழுவில் மொத்தம் 11-பேர் சென்றனர். மேல் வகுப்பு பல்கலைக் கழக மாணவர்களும் சிலர் இருந்தனர்.

'அடுத்த ஆண்டு அந்த இடத்தைத் தோண்டிப்பார்க்க இருக்கிறோம். பழங்காலத் தமிழர்களின் (இந்தியர்களின்) ஸ்தாபிப்பீடங்கள் இரண்டை நாங்கள் கண்டெடுத்தோம். அவை கிட்டா சர்க்காரிடம் தரப்படும்' என்று திரு. திரகோனிங் கூறினர்.

கிட்டா சர்க்காரும், கோத்தா கோலா மூடாவின் காதியும் பல்கலைக் கழகப் புதைபொருளாராய்ச்சிக் குழுவினருக்குச் சகல உதவியும் செய்தனர். குழுவினருக்கு நிதி உதவியவர்களில் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. சி. என். பார்க்கின் முன்னணியில் நிற்கிருர்.

ஆராய்ச்சியின்போது முதலைக்கும் நல்லபாம்புக்கும் அவர்கள் தப்பிச் செல்வதில் கஷ்டப்பட்டார்கள்.

தமிழர் வாழ்ந்த அப்பகுதியில் புதையல் ஏதாவது உண்டு என்று கருதப்பட்டதா என்று திரு. திரகோனிங்கிடம் கேட்கப்பட்டது. 1912-ல் "பொன்வாயில்" ஒன்று அப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் கூறினர்.

எனவே தங்கம் உட்பட பல இந்திய சாமான்களும், சீனர்கருவி முதலியனவும் அங்கு கிடைக்கும் என அக்குழுவினர் நம்புகின்றனர்.

கிட்டா என்பது ஆதிகாலத்திய கடாரம் என்றும், அதனை ராஜ ராஜ சோழன் வென்ருன் என்றும், அதனலேயே கங்கையும் கடாரமும் வென்றவன் அவன் எனப் பேசப்பட்டான் என்றும்வரலாற்று ஆசிரியர்களிடையே கருத்துநிலவுகிறது. இக்கண்டுபிடிப்பு அதற்கு அரண் செய்வதாயிருக்கிறது.

—நெ. மு.

★

சென்ற இதழ் தொடர்ச்சி

# பேரிடி வருகிறது

[சேலம் ஏ. சித்தையன்]

கடந்தவார இதழில் குறிப்பிட்டபடி, கிடைக்கிற நூலை துணியாக்குவதிலுள்ள சாத்தியக் கூறுகளை ஆராய்வோம். மில் பகுதி, விசைத்தறிப்பகுதி, கைத்தறிப்பகுதி ஆகிய மூன்று பகுதிகளாலும் இப்போதைய உற்பத்தி 670 கோடி கஜம். திட்ட இறுதி காலத்தின் தேவைக்கு இது 215-கோடி குறைவாகும். இந்த 215-கோடி கஜம் துணியும் கைத்தறிப் பகுதியிலேயே உற்பத்தி செய்வது சாத்தியமானது தானு? என்பதுதான் இன்றைய முக்கிய பிரச்சினை.

அகில இந்திய கைத்தறி போர்டும் கார்வே கமிட்டியும் கைத்தறிகளிலேயே இந்த 215-கோடி கஜம் துணியை உற்பத்தி செய்ய முடியும் என்று எடுத்துக் கூறியிருக்கின்றன. திட்ட மந்திரி திரு. குல்ஜாரிலால் நந்தா அவர்களும் அதை ஏற்றுக் கொள்ளுகிருர். ஆனுல் திரு. டி. டி. கே. மாறுபடுகிருர். எனவே பாரபக்ஷமில்லாமல் இவ்வாதத்தை ஆராய்வோம்.

மாகாண சர்க்கார்கள் சமர்ப்பித்திருப்பதும், அகில இந்திய கைத்தறி போர்டு ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதுமாகிய கணக்குப்படி இந்நாட்டிலுள்ள மொத்த கைத்தறிகளின் எண்ணிக்கை 28-இலட்சம். இவைகளில் வர்த்தகத்துறையில் இயங்காத அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள தறிகளின் எண்ணிக்கை 4. 5-இலட்சம். கார்வே கமிட்டியார் இவைகளையும் வர்த்தகத் துறையில் நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தறிகளாக இயக்கலாம் எனக் கூறியிருக்கின்றனர். பன்னிரண்டரை இலட்சம் தறிகள் ஆண்டிற்கு 200-நாட்கள் வேலை செய்து 140-கோடி கஜம் துணி உற்பத்தி செய்கிறது என்று கனுங்கோ கமிட்டியினரே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இந்த பன்னிரண்டரை இலட்சம் தறிகள் வருஷத்தில் 300 நாட்கள் வேலைசெய்வதற்கான வசதி செய்து கொடுக்கப்படுமானுல் மற்றும் 70-கோடி கஜம் துணி அதிகமாக உற்பத்திசெய்யமுடியும். சரியாக வேலை செய்யாமல்சோம்பிக்கிடக்கின்ற சுமார் 10-இலட்சம் தறிகளும், அஸ்ஸாம் மாகாணத்துத் தறிகள் நாலரைஇலட்சமும் சேர்ந்த 28-இலட்சம் தறிகளும் ஒரு ஆண்டில் 300 நாட்கள் வேலை செய்வதற்கான வசதியும் வாய்ப்பும் செய்து கொடுக்கப்படுமானுல் இப்போது உற்பத்தியாகிற 150-கோடி கஜத்துக்கு பதிலாக 470-கோடி கஜம் துணி மிகச் சாதாரணமாக உற்பத்தி செய்யமுடியும். இவற்ருேடு மில், விசைத் தறிப் பகுதியில் உற்பத்தியாகும் 520-கோடி கஜத்தையும் கூட்டினுல் 990-கோடி கஜம் உற்பத்தியாகிறது. ஆகவே நம்முடைய தேவைக்குமேல் சுமார் 100-கோடி கஜம் கிடைக்கிறது மற்ருென்றும் இங்கு கவனிக்கப்படல் வேண்டும். ஜனத்தொகை பெருக்கத்தை மட்டும் கவனித்து தேவையைக் கணித்த புள்ளிவிபர நிபுணர்கள், ஜனத்தொகை வளர்ச்சியில் கைத்தறி நெசவாளர்களும் அடங்கியுள்ளனர் என்பதை ஏனே மறந்துவிட்டனர். அதைச் சேர்த்துக் கணக்கிட்டால், உபரியாகும் கைத்தறிகளில் மற்றுமோர் 50 கோடி கஜத் துணி உற்பத்தி செய்ய முடியும். ஆகவே ஜனங்களின் வாங்கும் சக்தி தலைக்கு 25 கஜமாக உயர்ந்தால் கூட இப்போதிருக்கும் கைத்தறிகளைச்செம்மையாக இயங்க வைத்தாலே போதுமான துணி கிடைக்க வசதி இருக்கிறது. இதைவிட்டு மில்களில் தானுக இயங்கும் தறிகளோ, கைத்தறிப் பகுதியில் விசைத் தறிகளோ புகுத்தப்படவேண்டிய அவசியமே இல்லை. பெரிய மில் முதலாளிகளும், அவர்களின் பிரதிநிதிகளாகச் சர்க்காரில் வீற்றிருப்பவர்களும் புள்ளி விபரங்களில் செப்படி வித்தை காட்டுகின்றனர். மேலே குறிப்பிட்ட புள்ளி விபரங்களனைத்தும் மாகாண சர்க்கார் கணக்குகளிலிருந்தும் அகில கைத்தறி போர்டு கணக்கிலிருந்தும் எடுக்கப்பட்டவைகள். தங்கள் சௌகரியத்துக்கு ஏற்றுற்போல் புள்ளி விபரங்களை பொறுப்புள்ளவர்கள் மாற்றிக்கொண்டால் யார் சொல்லும் புள்ளி விபரத்துக்கும் சரியான ஆதாரமில்லையென்று பொது மக்கள் கூற ஏதுவாகிவிடும்.

*

கைத்தறிகளையே நம்பி வாழும் இலட்சக்கணக்கான மக்களின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் சில பணக்காரர்கள் மட்டும் வாழ்வதற்குத்தான் சர்க்காரின புதிய துணிக்கொள்கை வழி வகுத்திருக்கிறது. சர்க்காரின் புதிய ஜவுளிக் கொள்கை நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை மிகப் பரவலாகக் கொண்டுவந்து விடும் என்று நாட்டின் நலனில் அக்கரை கொண்ட நல்லவர்கள், பெரியவர்கள் அத்தனை பேரும் கூறிவிட்டனர்.

கைத்தறிகளுக்கு கொடுமைகளும், நெசவாளர்களுக்கு நிரந்தரமான வேலையில்லரத் திண்டாட்டமும் நாட்டின் பொருளாதாரத்திலேயே ஒரு குழப்பமும் உண்டாக்கக்கூடிய இந்த புதிய ஜவுளிக் கொள்கையை சர்க்கார் பிடிவாதமாக நாட்டில் திணிக்க எண்ணினுல், அகில இந்திய கைத்தறி போர்டிலிருந்து உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்கள் அனைவரும் இராஜிநாமா செய்யவேண்டி இருக்கும் என பம்பாயிலிருந்து திரு. எம். சோமப்பா அவர்கள் அறிக்கை விடுத்திருக்கிருர்கள்.

சீர்திருத்த எழிலேடு!

17—9—56 முதல்

**கலைக்கூடம்**

(மாதமிருமுறை)

ஆசிரியர்: கணை அரசு

தனி இதழ் 2 அணு

"கலைக்கூடம்" சிவகங்கை (R. D) என்ற முகவரிக்கு எழுத்தாளர்களும், இதழ் விற்போர்களும் தொடர்பு கொள்ளவும்.

விஞ்ஞான வளர்ச்சி வேண்டாமா, எத்தனை நாளைக்கு இந்தக் கர்னாடகத்தையே கட்டி அழுவது என்று சில நவயுகவாதிகள் கூறுகின்றனர். நாம் ஒன்றும் விஞ்ஞான வளர்ச்சியை எதிர்ப்பவர்களல்ல, ஆனால் நிலைமை என்ன? எல்லாத் தொழில்களும் விசையில் நடத்துவதற்கான அளவுக்கு நாட்டில் மின்சாரம் பெருகி இருக்கிறதா? இப்போதே கோடைக் காலங்களில் மின்சாரம் கட்டுப்படுத்தப்பட்டு பல மில்கள் ஓடுவது தடைப்படுகிறதே! எல்லாவற்றிற்கும் எங்கே மின்சாரம் உற்பத்தியாகியிருக்கிறது? வினோபா அவர்கள் கூறியதுபோல் "மின்சாரம் சூரிய ஒளிபோல் எளிதாக எல்லாருக்கும் கிடைக்கும்போது எல்லாத் தொழில்களையும் விசையில் நடத்தலாம்." அதுவரையில் செய்கிற தொழிலிலிருந்து இலட்சக்கணக்கான மக்களை வேலையில்லாத் திண்டாட்டத்திலாழ்த்துகிற கொடுமையான திட்டங்களை சிலருடைய நலனுக்காக அமுலாக்கவேண்டாம். உண்மையில் எல்லாத் தொழில்களும் மின்சாரத்தின் துணைகொண்டுதான் நடத்தவேண்டுமென்பதில் அரசாங்கத்திற்கு உறுதியிருந்தால் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை அம்பர் சர்க்காவுக்கு ஒதுக்குவானேன்? அம்பர் சர்க்காவில் உண்மையிலேயே நம்பிக்கை வைத்திருக்கிறதா? அல்லது இப்போதைக்கு மக்களுக்கு சமாதானம் செய்வதற்கு அதை ஒரு சாதனமாகக் கொண்டிருக்கிறதா? எனவேதான், ஒருபக்கத்தில் அதிகப்படியான வேலைகொடுக்க அம்பர்சர்க்கா. மற்றொரு பக்கத்தில் விசைத்தறி. ஆக இரண்டு தலைகளில் பேசுகிறது இந்தச் சர்க்கார். ஒரு தலையை வெட்டுங்கள் என்கிறார், ஆசாரிய வினோபாபாவே.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் போவதற்கும், மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கும்தான் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என நேரு போன்ற பெருந்தலைவர்கள் கூறுகின்றனர்.

*

கனுங்கோ அறிக்கை 86-வது பாராவில் ஒப்புக்கொண்டிருக்கிறபடியே வருஷம் 1-க்கு 4-இலட்சம்பேர் வேலையில்லாமல் தவிப்பர். கனுங்கோ அறிக்கை இருபது ஆண்டுகளில் கைத்தறி பூராவையும் நிர்மூலமாக்கிவிடவேண்டுமென்று கூறுகிறது. அந்த திட்டத்தின்படியேதான் டி. டி. கே. அவர்கள் ஒவ்வொரு நடவடிக்கையும் எடுத்து வருகிறார். இத்திட்டத்தின்படியாக கைத்தறிகளைக் குறைத்து 20-ஆண்டுகாலத்திற்குள் நாட்டிலுள்ள கைத்தறிகள் முழுவதையும் ஒழித்துவிடவேண்டுமென்று முடிவு செய்திருக்கின்றனர். இதற்கனுகூலமாகத்தான் பதிவு அல்லது லைசென்ஸ் முறையை அமுலுக்கு கொண்டுவருகிறார்கள். அதில் கண்டுள்ள அடிப்படை நோக்கம் புதிதாகக் கைத்தறித் தொழிலுக்கு யாரையும் அனுமதிப்பதில்லை என்பதுதான். ஆனால் இன்று ஆதாரக்கல்வித் திட்டத்தில் சர்க்கார் பள்ளிகளிலும் சொல்லித்தரும் தொழிற்கல்வி நூல் நூற்றலும், நெசவு நெய்தலும்தான். எவ்வளவு முரண்பட்டவாதம்? பதிவு அல்லதுலைசென்ஸ் முறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டு அதிகாரிகள் அதற்கு பலவித வியாக்கியானங்கள் கூறுகிறார்கள். லைசென்சுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கடுமையான ஷரத்துகள் நெசவுக்காரனைத் தற்கொலை செய்துகொள்ளச் சொல்லுகிறன. வினோபாபாவே அவர்கள் கூறியதுபோல் பிராந்தி கடைகளுக்குக் கூட அவ்வளவு கடுமையான ஷரத்துகள் இல்லை.

*

பவானியில் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி சர்க்காரின் புதிய ஜவுளிக் கொள்கையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் அங்கு பிரசன்னமாகியிருந்த அமைச்சர் பக்தவச்சலனார் சென்னையில் போய் அறிக்கை விடுகிறார் புதிய துணிக் கொள்கை கைத்தறியாளர்களைப் பாதிக்காது என்று!!

சேலத்தில்மந்திரி பக்தவச்சலத்தை நானும் என் நண்பர்களும் சந்தித்து சர்க்கார் கொள்கையில் இருக்கிற கஷ்டங்களை எடுத்துக் கூறினோம். நான் சொல்லுவதில் நம்பிக்கையில்லை என்றால் வேறு மந்திரியை வைத்துக் கொள்ளுங்கள் என்கிறார் அமைச்சர்.

ஆந்திர சர்க்கார் இந்திய சர்க்காரின் புதிய ஜவுளிக்கொள்கையை ஏற்க மறுத்துவிட்டது.

சென்னை சர்க்கார் மூவாயிரம் விசைத் தறிகளை ஏற்றுக்கொண்டு விட்டதாகப் பக்தவத்சலனார் சட்டசபையில் கூறினார்.

எப்படியும் சர்க்கார் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துவிடுவதென முனைந்திருக்கின்றனர் ஆங்காங்குள்ள கைத்தறி நெசவாளர் ஸ்தாபனங்களும் கூட்டுறவுசொசைடிகளும் அரசியல் கட்சிகளும் தெரிவித்த எதிர்ப்புகளையெல்லாம் சர்க்கார் சட்டைசெய்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை — ஆகவே சரியானதொரு கிளர்ச்சி துவக்கப்பட்டுச் சர்க்காரின் புதிய ஜவுளிக் கொள்கையை எதிர்த்துத் தீரவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு கைத்தறி நெசவாளர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர். இதில் தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பையும் கைத்தறி நெசவாளர் எதிர்பார்க்கின்றனர்.

கைத்தறி நெசவாளர்களே ஒன்றுபடுமின்! உங்களை நோக்கி ஒரு பேரிடி வந்துகொண்டிருக்கிறது. அதை தவிர்ப்பதற்கு முனையுங்கள்.

★

*நமது அரசாங்கத்திற்கு இரண்டு தலைகள் இருக்கின்றன. ஒரு தலை அம்பர் சர்க்காவுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறது. இரண்டாவது தலை நெசவுத் தறியில் இயந்திரத்தைப் புகுத்த வேண்டும் என்கிறது. "அட அரசாங்கத் தலையே! ஏன் அம்பர் சர்க்கா வேண்டுமென்று சொல்கிறாய்? மில்லை அதிகமாக்கலாமே?" என்றால் "அம்பர் சர்க்காவினால் அதிகம் பேருக்கு வேலை கிடைக்கும்" என்று அந்தத் தலை பதில் சொல்லுகிறது. இரண்டாவது தலையை "ஏன் விசைத்தறி வேண்டுமென்று சொல்லுகிறாய்?" என்றால் "நெசவாளர்களின் வருவாயை அதிகரிக்கச் செய்யவேண்டும்" என்கிறது சில நெசவாளர்களுக்கு வருவாய் அதிகம் கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பலருக்கு வேலை இல்லாமல் போக வேண்டுமா?*

"கிராமோதயம்"

# அவர் பார்ப்பனர்!

— படிறி —

"ஓய்! வரவர இந்த ஆசாமி ரொம்ப மோசமாயிண்டு வருவதைப் பார்த்தீரா?" என்று கேட்டார் சங்கரதீட்சிதர்; சுப்பு சாஸ்திரிகள், "என்ன பண்றது தீட்சிதரவாள்! என் போருத வேளை. அவன் பேரில் என்ன தப்பு? நம்மோட ஆத்திலே அடக்க ஒடுக்கம், பக்திபாசம், கட்டுதிட்டம் நாசமாயிண்டு வர்ரது. தலைகால் தெரியாமப்படிக்கு ஆட ஆரம்பிச்சாச்சி. நான் என்னத்தைச் செய்ய?" என்று சோகித்தார்; "சாஸ்திரிகளே! என்ன ஓய் இது நீர் இப்ப, எந்த ஆசாமியோட விஷயமாப் பேசறிர்? 'அவரை' இருக்கோன்னு கேட்டாதுவரைபடி எட்டணைனு விலை சொன்னுன் என்பார்களே, அந்தக் கதைபோலிருக்கே உம்மோட பேச்சு. ஆத்திலே அடக்க ஒடுக்கம் இல்லை என்கிறீர். அவன் பேரிலே என்ன தப்பு என்று அழறீர். எல்லாம் என் கர்மம் என்று தலையில் அடித்துக் கொள்கிறீர். நேக்கு ஒண்ணுமே புரியல்லையே. யாரோட விஷயமா நான் பேசறதாக எண்ணிண்டீர்" என்று சேட்க, சாஸ்திரிகள் தவறு நேரிட்டு விட்டதை உணர்ந்துகொண்டு, அசடு வழியும் முகத்துடன், "ஏதோ விசாரம், கிடக்கட்டும்; நீர் எந்த ஆசாமி வரவர மோசமாயிண்டு வாரார்னு சொல்றீர்?" என்று விளக்கம் கேட்டார்.

"கோதானம் பூதானம், கன்னிகா தானம் என்று தானுதிகாரியங்களுக்குக் கர்த்தாக்களாக இருந்து வந்தவா, 'பிரம்ம' குலத்தவா; நீசபாஷை பரவி, விதேசிகளோட பழக்கம் ஏற்பட்டதாலே, அந்தச் சம்பிரதாயம் சின்னுபின்னமாகிறதேன்னு, நம்ம குலத்துப் பெரியவா, ஆச்சாரிய ஸ்வாமிகள், அனவரதமும் கவலைப்பட்டுண்டு, சர்வேஸ்வரா! சதாச்சாரத்தை மறந்து திரியும் இந்தச் சண்டாளர்களை மறுபடியும் நல்வழிப்படுத்த மாட்டாயா! உனக்கு இது எம்மாத்திரம்!! — என்று தோத்தரித்திண்டு இருக்கா. இந்த மாதிரி நேரத்திலே, பெரிய தவசி போல வேஷம் போட்டுண்டு, நேக்கு சனுதனம் ரொம்ப பிடிக்கும். ஆழ்வாராதிகள் பாசுரம் தெரியும், கீதைக்கு வியாக்யானம் செய்திருக்கேன்—என்றெல்லாம் பேசிண்டு, 'பிக்ஷாந்தேஹி'ன்னு கிளம்பி இருக்கேன், இந்த ஜன சமூகத்திலே ஏறிப்போயிருக்கும் கெட்ட எண்ணம், பேராசை, சுயநலம், வெறிக்குணம் ஆகியவற்றைப் பஞ்சு பஞ்சாகப் பறந்தோடச் செய்துவிட்டு, பகவானேட அனுக்ரஹத்தாலே, பக்தி மார்க்கத்தை மீண்டும் ஸ்தாபிக்கப் போகிறேன் என்று சபதம் பேசிண்டு, கிளம்பி இருக்கே ஒரு சன்யாசி, விநோபா, அந்த விநாசத்தைத்தான் சொல்றேன் ஓய்! தர்மம் அழியப்படாது. பாபம் ஒழிக்கப்பட வேணும், பகவானை மறக்கப்படாது, பஜனை செய்யோணும் என்று சொல்லிண்டு இருக்கும்னு நினைச்சா, வரவர, மகா மோசமான போக்கிலே போயிண்டிருக்கு; பச்சை நாஸ்தீகன் போலப் பேசிண்டு, பாமராளோட மனசைப் பாழடிச்சிண்டு, சுத்திவர்ரது தெரியலையோ உமக்கு" என்றுர் தீட்சிதர். சாஸ்திரிகள் வேறு எத்தனையோ விதமான சஞ்சலத்துக்கு ஆளான நிலையில் இருந்ததால், இதைக் கவனிக்க அவருக்கு நேரமும் இல்லை, நிலையும் இல்லை.

"இந்த மனஷன், சாஸ்திரிகளே! பிரார்த்தனைக் கூட்டம்னு போட்டுண்டு, ஏதோ ராமநாம சங்கீர்த்தனம் கேட்டுட்டுப் போவோம்னு வருகிற ஜனங்களண்டை என்ன சொல்லியிருக்கார் தெரியுமோ? "இனிமேல் கோவில் கட்டுவதற்குப் பணத்தை செலவழிக்க வேண்டாம். அந்தப் பணத்தைக்கொண்டு ஏழைக் குடிசையில் வாழும் மக்களுக்கு வீடு கட்ட உதவி செய்யுங்கள்." கேட்டீரா, பச்சை நாஸ்தீகன் சொல்லமாட்டான் இப்படித் துணிச்சலோடு; பார்வைக்குப் பரமசாதுபோல் இருந்துண்டு, பக்தி வேஷம் போட்டுண்டு, இந்த விநோபா, இனிக் கோயில் கட்டப் பணம் செலவழிக்கவேண்டாம்னு, ஜனங்களிடம், சொல்றுர், இந்த இலட்சணத்துக்கு, இவர் பேசற கூட்டத்துக்குப் பிரார்த்தனைக்கூட்டம்னு வேறு பேர் சொல்ரு. எப்படி இருக்கு பார்த்தீரா; காலம் போற போக்கைப் பார்த்தீரா?" என்று சோகமும் கோபமும் கலந்த தொனியில் பேசினுர்.

*

வேரூர் பக்கத்திலே ஒரு காங்கிரஸ் ஊழியர், கழகத் தோழரைக் கண்டு, மார்பை முன்னுலே தள்ளிக்கொண்டு கெம்பீர நடைபோட்டுக் காட்டியபடி வந்தார்.

> "என்ன கழகம்! பார்த்தீர்களா? என்னமோ கோயில் கொள்ளை, மூடநம்பிக்கை, போன்ற பிரச்சினைகளெல்லாம், உங்க கழகத்தோட 'காப்பிரைட்' என்று எண்ணிக்கொண்டிருந்தீர்களே. விநோபா, ஓங்கி அடிக்கிறுர் பார்த்தீரா, மண்டையைப் பார்த்து. கோயில்களை ஏன் வீணுகக் கட்டிக்கொண்டு கிடக்கிறீர்கள். அந்தப் பணத்தை இனி ஏழைகளுக்கு வீடுகட்டச் செலவிடுங்கள் என்று சொல்கிறுர். தெரியுமா?"

என்று கேட்டுவிட்டு, கழகத்தாரின் செல்வாக்கைச் சிதைக்கவே, விநோபா இதுபோலப் பகுத்தறிவு பேசுகிறுர் என்று எண்ணி, மகிழ்ந்தார்.

கழகத் தோழரோ, "இப்போதாவது, அறிவுதுலங்கினுல் நல்லதுதான். நடமாடும் கோயிலுக்குப்

பூஜை செய்யுங்கள், படமாடும் கோயிலுக்குச் செய்தது போதும் என்று சொன்னால், உங்கள் காதிலே அது நாராசமாக இருந்தது—இப்போது விநோபா கூறும் போது, அதனைச் சுவைக்கிறீர்கள். மெத்தச் சரி. விநோபா போன்ற 'நிஷ்காமகர்மி'கள் சொன்ன பிறகாவது, உங்கள் மன அழுக்கு ஒழியுமா என்பதுதான் எமக்கு உள்ள ஆசை. கோயிலுக்கு ஏனய்யா, வீணாகச் செலவிட்டுப் பணத்தைப் பாழாக்குகிறீர்கள், பஞ்சையும் பராரியும் பரதவிக்கும் போது,அவர்களை வாழவைக்க வழி செய்யாமல், பணத்தை வாரி இறைக்கிறீர்களே, பயனற்ற காரியத்துக்கு என்று நாங்கள் சொல்லும்போது, கோபம் கொந்தளிக்கிறது; இப்போதாவது உண்மை தெரிகிறதா? விநோபா சொன்ன பிறகாவது உங்கள், சித்தம் தெளியுமா?" என்று கேட்கவே, காங்கிரஸ் தோழர், "ஓஹோ, விநோபாவின் பிரசாரத்தைக் கழகத்தார் தங்களுடையது என்று 'பாத்யதை' கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள்போலத் தெரிகிறது" என்று எண்ணி விசாரப்பட்டபடி விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

*

சாஸ்திரிகள், கேட்டார், "தீட்சிதரவாள்! விநோபா இப்படிப் பேசி நம்மோட 'ஐதீகத்தையே' பாழ்படுத்துகிறார்னு தெரிஞ்சும்,தேசத் தலைவர்கள் எதுக்காக அவரைக் கண்டு பேசறதும், கூட நடக்கறதும், போற்றிப் புகழ்வதுமா இருக்கா. அவாளுக்குத் தெரியாதா, இப்படிப்பட்ட பேச்சு,ஜனங்களைக் கெடுத்து நாசமாக்கும் என்பது" என்று கேட்டார்.

"கிணற்றுத் தவளைபோல் இருந்துண்டிருக்கிறே, சாஸ்திரிகளே! தேசத் தலைவர்கள் தேவாலயமும் அதற்குச் சேவை செய்யவே ஜெனித்த பிரம்ம குலமும்,எப்படிப் போனால் நமக்கென்ன, நமக்கு வேண்டியதெல்லாம், பட்டம்,பதவி என்ற கேவலமான மோகம் தடித்து அலையறா. அவாளுக்கு ஆஸ்தீகம் அழியறதுபத்தி என்ன அக்கரை? ஆலயம் பாழானா என்ன அக்ரகாரம் தீப்பிடிச்சு எரிந்தாதானென்னன்னு இருக்கா" என்று சோகமாகக் கூறினார். "எல்லோருமா அப்படிக் கெட்டுப்போய் விட்டா?" என்று கேட்டார் சாஸ்திரியார்; "அனேகமா எல்லோரும் அப்படித்தான் ஆயிட்டா, ஒரே ஒரு உத்தமர்தான், மூழ்கிப்போகும் கப்பலை எப்படியாவது. காப்பாத்தி அதிலே உள்ளவாளைக் கரை சேர்க்கவேணும்னு கங்கணம் கட்டிண்டு பாடுபட்டுண்டு இருக்கார்; நம்ம சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஒருவர்தான் இப்போதைக்கு நமக்கு இருக்கார்" என்றார்.

"அதுசரி, இந்த விநோபாவை இப்படியே விட்டுண்டு போறதா?" —என்று கேட்டார் சாஸ்திரிகள்— கண்களிலே குரூரக்குறிகள் தோன்றும் நிலையில்.

"பகவான் பார்த்துண்டு இருக்காரே, சாஸ்திரிகளே! நாம் என்ன செய்யறது? கோயில் கட்டவேண்டாம் என்று அந்த ஆசாமி சொல்றார், பகவான் கேட்டுண்டு இருக்காரே; மத்தவா என்ன செய்ய முடியும்? சாஸ்திரிகளே! அவர் சொல்றார், இனிக் கோயில்களுக்கு நிலம் தானமாகக் கொடுக்காதீர்கள்; அப்படிக்கொடுப்பது பாபம்—என்று. கேட்டீரா இந்த அக்ரமத்தை. செய்த பாவத்தைப் போக்கிக்கொள்ள, ஏழேழு ஜென்மத்துப் பாபத்தையும் நீக்கிக் கொள்ள, கோயில் கட்டச் சொல்லியும், நிலம் தானம் தரச்சொல்லியும் பெரியவா சொல்லியிருக்கா, ஆதிகாலம் தொட்டு இருந்துண்டுவரும் படியான வேத சாஸ்திராதிகள், தேவாலயத் திருப்பணியின் மேன்மை, மகிமைபற்றி'ஸ்பஷ்டமா' சொல்லி இருக்கு; நீரும் படித்திருக்கிறீர், நானும் இலட்சோப இலட்சம் மக்களுக்கு இதை எடுத்துச்சொல்லிண்டு இருக்கேன்...... இவர் சொல்றார், கோயிலுக்கு இனி நிலம் தானம் கொடுப்பது **பாபம்** என்று. கேட்கும்போதே, ராமா! இந்த அக்ரமத்தைத் தாங்கிக் கொண்டு இருக்கலாமா! என்று கதறத் தோணறது. கதறிப்பயன்? விநோபா, 'உபதேசம்'—னு எல்லா பத்திரிகைகளும் கொட்டை எழுத்திலே போடறா; இந்தக் கழகத்துக் காரா, நம்மை ஒரு மாதிரியா பார்க்கிறா! "என்ன எப்படி இருக்கு? விநோபா கொடுக்கிற சவுக்கடி எப்படி இருக்கு? என்று நம்மைப் பார்த்து கேலி செய்வதுபோலிருக்கு அவாளோட பார்வை.என்ன செய்யறது? — என்று விளக்கிக் கொண்டிருந்த தீட்சிதரின் கண்களுக்கு, எதிர்ப்புறமிருந்து கழகத் தோழர் வருவது தெரிந்தது.

*

"வாரான், பாரும் ஓய்! பிரம்மத் துவேஷி" என்று மெல்லிய குரலில் கூறிக்கொண்டே, மேலால் நடப்பதா, திரும்பிவிடுவதா என்று தீட்சிதர் யோசித்துக்கொண்டிருந்தார்.

கழகத் தோழர் இதற்குள் அருகில் வந்துவிட்டார்.

"என்ன, சௌக்கியமா?" என்று கேட்டார் சாஸ்திரிகள்; கழகத் தோழருடைய தகப்பனார் "இருக்கேன் சாமி! உங்களோட ஆசீர்வாதத்தாலே" என்று சொன்னதைக் கேட்டவர் சாஸ்திரிகள்: இப்போது பதில் அவ்விதம் இருக்காது என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்தவர் எனவே கழகத் தோழருடைய புன்னகையையே, போதுமான பதில் என்று கொண்டு திருப்தி அடைந்தார்.

எதிர்ப்புறமிருந்து வந்த வேறோர் நண்பரிடம் பேசும் ஆவலில், கழகத் தோழர், சாஸ்திரிகளிடம் பேச்சு கொடுக்கவில்லை.

"ஆசாமி, பாரும், எவ்வளவு தெம்புடன் போகிறான். கோயில் வேண்டாம், குளம் வேண்டாம் என்று பேச, ஒரு சாது, சன்யாசி புறப்பட்டாச்சி, இனி நமக்கென்ன குறை என்கிற எண்ணம், அவனோட பேச்சிலே, நடையிலே, பார்வையிலே, இருக்கு, பாரும், ஓய்!" என்று கூறி அங்கலாய்த்துக் கொண்டார் தீட்சிதர்.

*

"பார்ப்பார புத்தி மட்டும் எப்போதும் போகாதப்பா — என்ன செய்தாலும் போகாது" என்று, துவக்கினார், நண்பர், தீனாகானா! அவருடைய தத்துவம் தீனாகானா தவிர மற்றவர்கள் அனைவரும் (காமராஜர் மட்டும் விதி விலக்கு!) பார்ப்பன தாசர்கள் என்பது.

"என்ன தோழரே! எடுத்த எடுப்பிலேயே, பாணம் 'சரேல்' என்று

கிளம்புகிறது; என்று கேட்டார் கழகத் தோழர்.

"உனக்கு எங்கே புரியப்போகிறது? நீதான் "ஈயம்" ஆயிற்றே!" என்று கேலி பேசினார் தீனகானா.

"சொல்லு—நீ ஏசுவது கேட்டுத் தான் எனக்கு எரிச்சல் வருவது கிடையாதே" என்றார் தீனா மூனா கானா. அவருக்கு, தீனகானா நண்பருக்கு ஏன் கோபம் கிளம்புகிறது என்பது தெரியும்.

"வினோபா, பாவம், நல்ல மனிதர், பரம சாது நல்ல பகுத்தறிவு பேசுகிறார் — அவர் கோயிலாவது குளமாவது என்று பேச ஆரம்பித்ததும், பார்ப்பனர்கள், அவர் மீது துவேஷம் கொண்டு, அவரைத் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள், தெரியுமா?" என்றார்.

"அப்படியா?" என்று கேட்ட, கழகத் தோழர், நாலு பார்ப்பனர், வினோபா மீது பகை கக்கினால் என்ன, நாமெல்லாம் அவர் பக்கம் திரண்டு நிற்போம்" என்று சொல்ல எண்ணினார்; தீகா, பேச விடவில்லை, "ஒரு பார்ப்பான் இருக்கும் வரையில், நாட்டிலே பகுத்தறிவு பரவ இடம் கிடைக்காது; ஆமாம், திட்டமாகக் கூறிவிட்டேன்; நீ எப்படியோ கெட்டுத் தொலைந்துபோ, என் வேலை, ஒரு பார்ப்பான கூட இருக்கக்கூடாது. பூண்டோடு ஒழித்தாக வேண்டும்," என்றார்.

"சரி, தோழரே! அதற்காக நீர் சல்லடம் கட்டிக்கொண்டு புறப்படும் போது பார்த்துக்கொள்வோம். இப்போது, எங்கே இவ்வளவு அவசரமாகச் செல்கிறீர்?" என்று கேட்டார் கழகத் தோழர். காமராஜர் பேசுகிறார்–போகிறேன— என்றார். அப்போதுதான், அவர் கையில்மாலை இருக்கக் கண்டார் கழகத் தோழர்.

இருவரும் சென்றனர்; காமராஜர் நண்பர் ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்.

**'வரவர, நாட்டிலே நாஸ்தீகம் வளருகிறது. அதை முளையிலேயே கிள்ளி எறிந்தாக வேண்டும். நமது மதம், புராதனமானது, மகிமை வாய்ந்தது. நமது தேவாலயங்கள் சிலாக்கியமானவை. சகல பாபங்களையும் போக்கிக்கொள்ள அவைகளை நமது முன்னோர்கள் கட்டினார்கள். இந்தக் காலத்தில் சில தறுதலைகள் கோயிலாவது குளமாவது, பாபமாவது, புண்ணியமாவது என்று பேசுகின்றன. இதுகளை ஒழித்துக்கட்டி விட்டுத்தான் மறுவேலை பார்க்கப் போகிறோம்."**

காமராஜருக்கு மாலை போட்டாயிற்று; அவர் அதனை பக்கத்திலிருந்த காங்கிரஸ் ஊழியரிடம் எடுத்துக்கொடுத்தார் — ஏதோ ஓர்விதமான கேலிப்பார்வையுடன்.

தீகா, தீனாமூனாகானாவை மேலும் அங்கே இருக்க விடவில்லை. இருவரும் திரும்பினர்.

"தோழரே! இப்போது பேசினாரே, ஒரு பழய பஞ்சாங்கம், அவர் பார்ப்பனரல்லாதார்! கோயிலுக்கும் குளத்துக்கும் பணத்தைச் செலவிடவேண்டாம், அது பாபம், தீது, என்று பகுத்தறிவு பேசிவருகிறாரே, வினோபா, அவர் பார்ப்பனர்! என்றார் கழகத்தோழர். தீகாவின் கண்களில் தீப்பொறி தெறித்தது. ★


புதிய விருந்து!

23—9—56-லிருந்து

சுவைமிக்க தொடர் கதை

# "தணலில் தங்கம்"

ஆரம்பமாகிறது

சுழல் விழி மாது கிளப்பும் சூறுவளியில்
கயல் விழிப் பாவை சிக்கி

வாழ்வில் இடர்ப்பட்டு
தணலில் தங்கமான காதை

குடும்பம் முழுவதும் படித்து மகிழத்தக்க மாண்பு விளக்கம் இனிமையாக அளிக்கப்படுகிறது.

பச்சையப்பன் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் மா. கி. தசரதன் அளித்திடும்

எழிலோவியம்

6-ம் பக்கத் தொடர்ச்சி

கோழி வளர்ப்போமா, கொல்லன் பட்டரையில் வேலை செய்வோமா, என்ன செய்தால், நமக்கு இன்னும் ஒரு கவளம் கிடைக்கும் என்று ஏக்கத்துடன் எண்ணி எண்ணி, 'போதாமை'யால் தாக்குண்டு கிடக்கிறான், ஏழை! அவனுக்குப் போதிக்கப்படும் தேசீயமோ, குமுறுமல் கொடு, குறை கூருமல் கொடு, வரியாகக் கொடு, கடனாகக் கொடு, நகைக்குச் செலவிடாதே, 'நல்லது பொல்லதுக்கு' என்று பணத்தை வீணுக்காதே, நாங்கள் அடிக்கடி கடன் கேட்போம், உன் கடமை என்று எண்ணிக்கொண்டு, கழுத்துத் தாலியில் உள்ள குண்டு மணிப் பொன்னாக இருந்தாலும், எடுத்துக் கொடு, தேசபக்தன் என்ற கீர்த்தி உனக்குக் கிட்டும்—என்று பிரசாரகர்கள் பேசுகிறார்கள்.

கந்தப்பன், கையைத் தூக்க முடியவில்லையே, என்று கதறிக் கிடக்கிறான்.

வாழ்வு சுமையாகி விட்டது, தலை நிமிர்ந்து நிற்க முடியவில்லை என்று பொதுமக்கள் புலம்புகிறார்கள்.

செந்திலாண்டவனுக்குச் சந்தனக் காப்பு உற்சவம் 'சம்பிரமாக' நடைபெறுகிறது; சவுதி அரேபியாசுற்றுப்பயணத்துக்காக நேரு பெருமகனார் தம் 'ஜமா' வுடன் தயாராகிக்கொண்டிருக்கிறார். அவர் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்து ஒரு திங்கள் ஆகிறது, இதற்குமேல் அவருக்கு இங்கு இருக்கப் பிடிக்கவில்லை. சவுதி அரேபிய மன்னரின் விருந்தினராகிறார்! அன்றலர்த ரோஜா தினமும் விமானமூலம் நேருவுக்குக் கொண்டு வந்து தர ஏற்பாடாம். சவுதி அரேபிய மன்னரின் இரம்மியமான ஒரு அரண்மனையில் நேரு துரை மகனார் தங்கி இருக்க ஏற்பாடு! நேருவுக்குப் பிரியமான உணவு வகைகளைச் சமைத்திட, இங்கிருந்தே திறமையான சமையற்காரர்கள்! சவுதி அரேபிய மன்னர், கோடீஸ்வரர்! அவருடைய விருந்தினராகத் தங்கி இருக்கும் நாட்களில், ரோஜாவின் மணமும் ராஜோபசாரமும், சலாமிட்டு நிற்கும் பணியாட்களின் குழைவும். சர்வதேச நிலைமை பற்றிய பேச்சும், நேருவுக்கு மனச் சந்துஷ்டி அளிக்கும்; மகனைத் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாக்கிவிட்டு மாரடித்து அழுது கொண்டிருக்கும், தாய்மார்களின் கதறல் அல்லவா அவருக்கு இங்கு காது குடையும் அளவுக்குக் கிடைக்கிறது! கண்ணீர் குண்டு வீச்சினால் கிளம்பும் புகையும், பிணவாடையும், நாள் தவருமல் இங்கு! எப்படி நேரு பெருமகனார் இந்தக் 'கண்ருவி'க் காட்சியைக் காண்பது! நிம்மதி இராதே! இதற்கோ அவர் இந்தியாவின் முடிசூடா மன்னரானார்!! மோதிலாலின் திருக்குமாரன், தங்கத் தொட்டிலில் தாலாட்டி வளர்க்கப்பட்ட செல்லப்பிள்ளையாமே!

கண்ணே! கண்வளராய்

கட்டிக்கரும்பே! கண்வளராய் என்று தாலாட்டுப்பாடித் தாதியர் தொட்டிலாட்டியிருப்பர். அப்படி வளர்ந்த ஆனந்தபவனத்தாருக்கு, இங்கு, ஐயோ! அப்பா! அம்மாவோ! என்ற அலறலும் கதறலும், எப்படி இனிப்பளிக்கும்? எனவே சவுதி அரேபியா செல்கிறார்! பன்னீரில் குளிக்கலாம், பரிமளகந்தம் பூசலாம், சிரித்திடும் ரோஜாவையும் புன்னகை பூத்திடும் இராஜதந்திரிகளையும் கண்டு களிக்கலாம்; தேன் பாகிலே பதமாக்கப்பட்ட பேரீச்சம்பழமும், கனிச்சாறும் அவருக்கு, மொழி வழி அரசு, எல்லைத் தொல்லை என்பன போன்றவைகளால் ஏற்பட்ட எரிச்சலைப் போக்க உதவக்கூடும்.

மறந்தேபோனேனே தம்பி, இந்தியாவின் மதிப்பு உயரும்!!

இதனாலா? இங்கு மக்கள் இல்லாமையில் இடர்ப்பட்டுக்கொண்டு கிடக்கும்போது இவர் சவுதி அரேபியர் சென்று இராஜோபசாரம் பெறுவதாலா இந்தியாவின் மதிப்பு உயரும்? என்று — உனக்குக் கேட்கத் தோன்றும்! அப்படித்தான் அவர்கள் சொல்லுகிறார்கள், நம்பாதவனைத் தேசத்துரோகி என்று ஏசுகிறார்கள்.

"என்ன சந்தனக் காப்பு உற்சவமோ! கைகளுக்கு என் பிராணனை வாட்டுது. இப்படி வலி எடுக்கும் அளவுக்கு நான் அரைத்தெடுத்தசந்தனந்தானய்யா அது — என்று செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அரைத்திடும் கந்தப்பன் சொன்னால் சும்மா விடுவார்களா! செந்திலாண்டவன்கூட அல்ல, அங்கு வரும் காவடி தூக்கியும் காவிகட்டியும், மொட்டையும் பிறவுமன்றோ, கந்தப்பன் மீது வசை பொழியும்.

சவுதி அரேபியாவோடு நின்று விடுவதா, நேரு பவனி!

நேருபவனி, ஒரு நீண்ட தொடர் கதை......

அமெரிக்கா அழைக்கிறது, ஆஸ்திரேலியாவில் அலுவல் இருக்கிறது, எங்குதான் செல்லக் கூடாது! செல்கிறார்!!

இதற்காகச் செலவாகும் தொகையை எமக்குச் செலவிட்டால் கூடப் போதுமே, புளித்த கூழுக்கு ஒரு துண்டு காரமிள காயாவது கிடைக்குமே! என்று கேட்பர் இந்தப் பஞ்சைகள்.

பஞ்சைகள் எப்போதும் எந்த நாட்டிலும் இப்படித்தான் கேட்பது வாடிக்கை; பவனிவரும் ஆட்சியாளர் குறுநகைபுரிந்தபடி, "குறைமதியினரே! வீணாக ஏதேதோ கூறிக் கிடக்கின்றீரே! பவனியால், எமக்கா இன்பம்? நாட்டின் மதிப்பன்றோ உயருகிறது" என்று பேசுவதும் வழக்கம்!

பொறுமையின் எல்லைக்குப் பஞ்சைகள் சென்று முகட்டின்மீது நிற்பர். மேலால்செல்ல வழி இருக்காது. பிறகுதான் திரும்பிப்பார்த்திடுவர். தம்பி! அப்படித் திரும்பிப் பார்த்திடும்போதுதான், 'பஞ்சடைந்த கண்களிலே கனல் கக்கும், புழுவும் போரிடும்' என்ற நிலை பிறக்கும்.

அது, இப்போது, உடனடியாக நடைபெறக் கூடியதா, என்ன? எனவே, வீண்பீதிக்கு இடமளிக்காமல், நேரு பெருமகனார் சந்தனக் காப்பு உற்சவத்துக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறார்.

தம்பி! எப்படிப்பட்ட எழில் மிக்க நாட்டிலே இருக்கிறாய் தெரியுமா என்று எந்த ஏழையைக் கேட்டாலும், அவன் ஒரு விளக்க

மற்ற பார்வையால் நம்மைத் திகைக்க வைப்பான்.

இமயப் பனிமலையின் எழிலும் கங்கை புரண்டோடும் கவர்ச்சியும், காதல் மாளிகையாம் தாஜ்மஹாலின் தகத்தகாயமும், குதுப்மினாரின் கெம்பீரமும், அஜந்தா சித்திரமும், விஜயநகர சாம்ராஜ்யச் சேதக் குவியலும், மாமல்லபுரத்துச் சிற்பங்களும், குமரிமுனைக் கோலமும் அவன் எங்கே கண்டான்? எங்ஙனம் காண்பான்? இதோ வருகிறார்கள், இந்த எழில் கண்டு மகிழவும், இவை தம் ஏற்றத்தை எடுத்துரைக்கும் பிரமுகர்களுடன் அளவளாவவும்; இந்த நாட்டுக் கலை கல்லிலே வடித்துக் காட்டப்பட்டது மட்டுமல்ல, காவலர்களே! கல்லிலே நீவிர்கண்ட குமரியை, அஜந்தா சித்திரத்திலே உங்களை வசீகரித்துக்கொண்ட அந்த வளைவு, குழைவு, நெளிவுகளை, இதோ உங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடச்செய்யும் வகையில் எடுத்துக் காட்டும், மாலாக்களையும் பாலாக்களையும் குமரிகளையும் தேவிகளையும் காணீர். அவர்கள் கரத்தால் கமலம் காட்டுவர், கண்ணால் கடலைக் காட்டுவர், வெறும் ஆடலல்ல அன்பரீர்! கேவலம் இச்சையைக் கிளறும் அங்க அசைவுகளல்ல! இவை ஆன்ம சுத்திக்காகவே எமது ஆன்றோர் அளித்துச் சென்ற 'கலோபாசனை' — கலை மூலம் கடவுளைப் பூஜிப்பதாகும்!— என்று கூறுவர்.

இந்த உபசாரம், உலா, பெறுவதற்கு இப்போது வர இருக்கும் தலைவர்களின் பட்டியல், தற்காலிகமானது, தருகிறேன், பார், கந்தப்பன் கரத்திலே சுளுக்கு இருந்தால் என்ன, சந்தனக்காப்பு சம்பிரமாக நடைபெறுகிறதே அந்தச் சம்பவம் நினைவிற்கு வரும்.

**எதியோபிய சக்கிரவர்த்தி**
**இந்தோனிசியத் தலைவர் டாக்டர் சுகர்னோ**
**போலந்து முதலமைச்சர்**
**தாய்லந்து முதலமைச்சர்**
**சிரியா நாட்டுத் தலைவர்**
**இலங்கை முதலமைச்சர்**
**நேபாள நாட்டு முதலமைச்சர்**

இவர்களெல்லாம் 'விஜயம்' செய்ய இருக்கிறார்கள்!

விருந்து, வேட்டை, கேளிக்கை, கண்காட்சி, இடையிடையே சர்வதேச நிலைமை பற்றியும் பேசுவர்!

ஒவ்வொருவருக்கும், குடியரசுத் தலைவர் விருந்தளிப்பார், குடியரசுத் தலைவருக்கு அவர்கள் ஒவ்வொருவரும் விருந்தளிப்பர்! முதலமைச்சர் ஒவ்வொருவருக்கும் விருந்தளிப்பார், ஒவ்வொருவரும் முதலமைச்சருக்கு விருந்தளிப்பர்; எல்லா விருந்துகளிலும் நளினிகளின் நடனம் உண்டு! எல்லாம் கந்தப்பன் அரைத்தெடுத்த கலவைச் சந்தனம் தம்பி, அவன் கைக்கு எருக்கம்பாலடித்து, களிமண் பூச்சுத் தடவிவிடப்பட்டிருக்கிறது!

ஒரே அடியாக உன் அண்ணன், எரிந்து விழுகிறான், நாங்களெல்லாங்கூட வருத்தப்படக் கூடிய விதமாகப் பெரும் பொருள் இப்படிப்பட்ட விருந்து, உபசாரம், உலா, உற்சவம், ஆகியவற்றுக்குச் செலவாகி விரயமாகிறது, ஆனால் எல்லாப் பணமும் இதற்கே பாழாகிவிடுவதுபோல எடுத்துக் கூறுவது, சரியல்ல; வாழ்வும் வளமும் தரத்தக்க எத்துணையோ நல்ல திட்டங்களுக்குப் பணம் செலவிடப்படுகிறது, என்று தம்பி! காங்கிரஸ் நண்பர் கூறக்கூடும்.

அந்த இலட்சணம் எப்படி இருக்கிறது என்பதையும், அந்தப் பொல்லாத மனிதர், கவர்னர் குமாரசாமிராஜா சென்ற கிழமை எடுத்துக் காட்டிவிட்டார்.

பிரம்மாண்டமான பணவிரயம்—வீண் செலவு! — என்று குமாரசாமிராஜா கூறுகிறார்.

பத்துக்கோடி ரூபாய் செலவில் இங்கு கட்டப்படுகிறது, பவானி சாகர்! மிகப் பிரமாதம் என்று விளம்பரப் படுத்தப்பட்டு வரும் தாமோதர் திட்டத்தை நான் பார்த்தேன்—அங்கு பிரம்மாண்டமான பண விரயம் நடந்துகொண்டிருக்கிறது'—என்று சென்ற கிழமை கோவையில் கூறினார்.

அஞ்சா நெஞ்சும், நேர்மைத் திறனும் கொண்டிருந்தாலொழிய, இவ்வளவு வெளிப்படையாக, இந்திய சர்க்காரின் திறமைக் குறைவை, ஊதாரித்தனத்தைக் கண்டித்திருக்க முடியாது.

இந்திய சர்க்காரின் நிர்வாகத்தைக் கண்டிப்பது என்றால் நேருவைக் கண்டிப்பது என்று பொருள்! நேருவுக்கோ யாராவது ஒரு சிறு சொல் கூறிவிட்டாலும் கண் சிவந்துவிடும்! நேரு புருவத்தை நெரித்தால், எந்தக் காங்கிரஸ் தலைவருக்கும் எதிர்காலம் இருண்டுவிடும்!

இவை தெரிந்தும், உள்ள நிலையை எடுத்துக் கூறத்தான் வேண்டும் என்ற வீரத்தைக் காட்டிய, குமாரசாமிராஜாவைப் பாராட்டாதவர்கள், பண்பற்றோரே!

கவர்னர் பதவி என்பது காந்தி கோயிலில் பஜனை செய்வதற்கும் கலா பவனத்தில் காட்சி காண்பதற்கும மட்டுமே உள்ள 'பொழுதுபோக்கு' என்று கருதாமல், நாட்டவருக்கு உண்மையை நடுக்கமின்றி எடுத்துரைக்கும் பெரும் பொறுப்பும் கவர்னருக்கு உண்டு என்ற தூய நோக்குடன், குமாரசாமிராஜா பேசினார்.

எங்கள் பக்கம் அணை கட்டுவதற்கு, செலவு சற்று அதிகம் தான் பிடிக்கும்—உங்கள்பகுதியில் கிடைப்பதுபோன்ற கற்கள் இங்கு கிடைப்பதில்லை, எனவே இங்கு சிறிது பணம் அதிகமாகச் செலவாகிறது என்று, திட்ட அலுவலக அதிகாரி சமாதானம் கூறுகிறார். குமாரசாமி ராஜா அவர்கள் பல உண்மைகளைத் தமது 'இரத்னச் சுருக்கமான' பேச்சிலே வெளியிட்டிருக்கிறார்; முப்பது ஆண்டுகள் இருந்து முகந் திருத்தி ஈரோடு பேன் வாங்கி இதமாக எடுத்துச் சொன்னாலும், இதுபோன்ற அஞ்சா நெஞ்சுடன் நம்ம காமராஜா பெரிய இடத்தின் போக்கைக் கண்டித்துப் பேசும் அஞ்சாமையைப்பெறுவாரா என்பதும் சந்தேகமே!

1. இங்கு செலவாவதைவிட வடக்கே, பணம் அதிகம் செலவாகிறது.

2. செலவு செய்யப்படும் முறை, வீண் விரயத்துக்கு இடமளிக்கிறது.

3. அனாவசியமாக அதிகமான அளவு மேலதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவை, திட்டம் அமுல் செய்யப்படுவது பற்றி, நேரில் கண்டறிந்தவர், பொறுப்பான பதவியில் அமர்ந்திருப்பவர், கூறுவன.

வடக்கு என்பதற்காகவே ஏதாவது வம்பும் தும்பும் பேசும் வட்டாரமல்ல.

தேர்தல் ஆசை பிடித்துக் கொண்டதால், பேசும் பேர்வழியுமல்ல!!

பணம் விரயம் ஆவதை மட்டுமல்ல, அவர் சுட்டிக்காட்டி இருப்பது.

தாமோதர் திட்டத்திற்குத் தேவையைவிட அதிகத் தொகை செலவிடப்படுகிறது என்பது மட்டுந்தான் ராஜாவின் மனக்குறை என்றால், உயரிடத்தில் அமர்ந்துள்ள அவர், இதனை நேருவிடம் ஜாடை மாடையாகக் கூறினாலே போதும். ஆனால் 'ராஜா' — கோவைப் பொதுக்கூட்டத்தில் தொழிலதிபர்களும், துரைத்தனத்தாரும் கூடியிருந்த மன்றத்தில் எடுத்துப்பேசி இருக்கிறார்.

திட்டங்களைச் சிக்கனமாகச் செலவிட்டு முடிக்கவேண்டும்என்ற நோக்கத்துக்காகப் பேசினதாக யாராவது கருதிக்கொண்டு, தமது பேச்சின் சூட்சமத்தை அறியாது போய்விட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தினால் உந்தப்பட்ட நிலையில், ராஜா மேலும் சில உண்மைகளை எடுத்துக்காட்டினார்.

1. வடக்கே, பேசுவது சர்வோதயம் பற்றி! ஆனால் நடைமுறை என்ன என்றால், பிரமாண்டமான நவீன அமெரிக்க யந்திரங்களை வரவழைப்பது!!

இந்தக் 'கேலி'க்கு ஈடாகச் சமீப காலத்தில், எந்தத் தலைவரும் வடநாட்டுப் போக்கைக் கண்டித்ததில்லை என்று கூறலாம்.

கட்டுவது காவி
தொட்டு இழுக்கிறான் பாவி!

என்று காரிகை கதறக் கேட்டால் எப்படி இருக்கும்? அதுபோல, பேசுவது சர்வோதயம், வரவழைப்பதோ அமெரிக்க நவீன யந்திரம்— என்று குட்டுகிறார் ராஜா!!

சர்வோதயம் —ஒரு இலட்சியம், உத்தமரொருவர் ஊருக்கும்உலகுக்கும் காட்டும பாதை! இதற்கு உதட்டுபசாரம் அளித்துவிட்டு, தமது தேவைக்கு, வசதிக்கு, அமெரிக்காவிலிருந்து நவீன யந்திரங்களை வரவழைத்துப் பயன் பெறுகிறார்கள் வடக்கே!

சர்வோதயம் பேசப்படுகிறது— செயலோ அதற்கு நேர்மாறாக இருக்கிறது.

இந்தக் கபடத்தைக் காட்டமட்டும் ராஜா இதைக் கூறினதாக நான் எண்ணவில்லை, தம்பி, இதற்கு உள்ளே மிகப் பெரிய உண்மை உறங்கிக்கொண்டிருக்கக் காண்கிறேன்.

ஓ! என் நாட்டவரே! உரத்த குரலில், சர்வோதயம் பற்றிய உபதேசம் நடக்கிறது; வடக்கே இருக்கும் தலைவர்களெல்லாம், அந்த இலட்சியத்தை வாழ்த்திப் பேசுவது கேட்டு, மயங்கிவிடாதீர்கள்! சர்வோதயம் பேசும் அந்த வடக்கத்தித் தலைவர்கள், இனிக்க இனிக்க, நெஞ்சு நெக்குருகப் பேசுகிறார்களே தவிர, உள்ளூர அவர்களுக்கு சர்வோதயத்திலே நம்பிக்கை கிடையாது, சர்வோதயம் பேசிக்கொண்டு அவர்கள் அங்கே சர்க்கரை ஆலை வேண்டாம கருப்பட்டி போதும, நூலாலை வேண்டாம் சர்க்கா போதும், காகித ஆலை வேண்டாம் பனை ஓலை போதும், மோட்டார் தொழில் வேண்டாம், கட்டை வண்டி போதும், டிராக்டர் வேண்டாம ஏர் எருது போதும், என்றெல்லாம் இருந்துவிடுகிறார்கள் போலும் என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள், நாமும் இங்கு சர்வோதயம் காண்போம் என்று மனதார நம்பி வளர்ச்சியைக் குலைத்துக்கொள்ளாதீர்கள்;

வடக்கே உள்ளவர்கள் பேச்சிலே தான் சர்வோதயம், ஆனால் நடைமுறையிலோ, நவீன அமெரிக்க யந்திரங்களைத்தான் வரவழைக்கிறார்கள்.

அவர்களுடைய இந்தக் கபடத்தை நான் கண்ணால் கண்டேன் —ஏமாறாதீர், என் நாட்டவரே! அவர்களின் சொல்வேறு, செயல் வேறு! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறார்கள்.

குமாரசாமிராஜாவின பேச்சிலே இவ்வளவும், எண்ணிப் பார்க்கப் பார்க்க இதனினும் அதிகமாகவும், பொருள் பொதிந்திருக்கக் காண்கிறேன்.

சர்வோதயம் பேசுகிறீர்களே! இப்படி நவீன யந்திர மோகம் கொண்டு அலைகிறீர்களே!—என்று ராஜா, வடக்கே இடித்துக் கூறவில்லை, தம்பி, இங்கு நமக்கு எச்சரிக்கை செய்கிறார், சர்வோதயம் பேசும் வடநாட்டார் தங்கள் தொழிலில் பழைமையின் சாயலைக்கூட வைத்துக்கொண்டில்லை, எல்லாம் அமெரிக்க யந்திர மயமாக இருக்கிறது; உண்மையை அறியாமல், அவர்கள் உதட்டசைவு கேட்டு, மயங்கிவிடாதீர்கள்; சர்வோதயம், பேச்சு; செயல் நவீனம், நவயுகம்


## "வாய்வு சூரணம்"

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு' பித்த வாய்வு' மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகால் அசதி, பசியின்மை, செறியாமை, வயிற்று வலி, பித்த மயக்கம், பித்த சூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப் பெற்றது. (பத்தியமில்லை)

5-பலம் டின் 1-க்கு ரூ. 3-0-0

தேவைக்கு:—

சம்பு இண்டஸ்ட்ரீஸ்
சேலம்-2

அமெரிக்க மறை!—என்று எடுத்துக் கூறுகிறார்.

தம்பி! பலமுறை பார்த்து, மிகவும் மனம் புழுங்கி, நீண்ட காலம் மறைத்துப் பார்த்துப் பார்த்து, கடைசியில் இனியும் நாமறிந்த இந்த உண்மையை நமது மக்களுக்கு எடுத்துக் கூருமலிருப்பது, மக்களுக்கு நாம் மனதறிந்து செய்யும் துரோகமாகும் என்று உணர்ந்து, என்ன நேரிட்டாலும் கவலை இல்லை, நேருவுக்குக் கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தாலும் பரவாயில்லை, என்று துணிந்து, பேசின பேச்சு என்றே நான் இதனைக்கொள்கிறேன்.

தம்பி! வடக்கு வளருகிறது தெற்கு தேய்கிறது என்று நாம், கூறும்போது, அலங்காரப் பேச்சு அடுக்குமொழி என்று கேலி பேசினரே, அவர்கள், ராஜா அம்பலப்படுத்தியிருக்கும் உண்மையைக் கண்ட பிறகேனும், சிந்திப்பார்களா என்று கேட்டுப்பார்.

அவர்கள் சிந்திக்கிருர்களோ இல்லையோ, குமாரசாமிராஜா அவர்கள் நிறம்பச் சிந்தித்திருக்கிருர் என்பதும், செயல்படக்கூட விரும்புகிருர் என்பதும் விளங்கும் வகையில் மேலும் சில உண்மைகளை அவர் கூறுகிருர்.

**1. மத்ய சர்க்கார் அனுவசியமாக மாகாண சர்க்காரின் அலுவலில் குறுக்கிட்டுக் கொண்டு வருகிறது.**

மத்ய சர்க்கார் ஆதிக்கம் செய்கிறது, மாகாண சர்க்காருக்கு முழு உரிமை கிடையாது என்று நாம பேசும் போது, முகம் சுளித்துக் கொள்கிருர்களே காங்கிரசார், அவர்கள் இந்தக் 'குற்றச்சாட்டு' ஒரு கவர்னர் மூலம் பதிவு செய்யப்படுவது, கண்டு ஆச்சரியத்தால் வாய்பிளந்து நிற்பார்கள் என்று எண்ணுகிறேன். எவ்வளவு திறமையாக, அப்பழுக்கற்ற முறையில் மாகாண சர்க்கார் ஒரு திட்டம் தயாரித்தாலும், தங்கள் அதிகாரமும் அமுலும் இருக்கவேண்டும் என்பதற்காகவென்றே, மத்ய சர்க்கார், அதிலே அங்கொரு மாற்றமும் இங்கொரு மாற்றமும் செய்து, திட்டத்தைத் திருத்துகிறது என்று கூறுகிருர் ஒரிசாவில் கவர்னராக வேலைபார்க்கும் ராஜா.

கூறினதுடன் அவர் அமைதி கொள்ளவில்லை; மத்ய சர்க்கார் இனியும் இந்தப் போக்கிலே இருக்கக் கூடாது என்று புத்திமதி கூறலாமா என்றுகூட அவர் எண்ணிக்கொள்ளவில்லை.

புத்திமதி கூறும் கட்டம்போய் விட்டது; பிறர் கூறும் அறிவுரையைக் கேட்கும் நிலையிலும் மத்ய சர்க்கார் இல்லை என்பது அவருக்குப் புரிந்திருக்கிறது. எனவே குமாரசாமி ராஜா, போர்க்கொடி உயர்த்துவதுபோலவே பேசுகிருர்.

**2. மேலிடத்தவரின் குறுக்கீடுகளை நாம் எதிர்த்துப்போராட வேண்டிய காலம் விரைந்து வருகிறது**

என்று கூறியிருக்கிருர்.

தம்பி! பொறுமை உணர்ச்சியும் பொதுப் பிரச்சினைகளிலே அக்கரையும் கொண்ட காங்கிரஸ் நண்பர் யாராவது உனக்குத் தெரிந்திருந்தால், அவரை, குமாரசாமி ராஜாவின் பேச்சிலே பொதிந்து கிடக்கும் உண்மைகளைப்பற்றி விளக்குமபடி கேள்; கேட்டுக் கொள்ளும் பண்பு அவரிடம் இருந்தால் நீ விளக்கிக் காட்டு.

வடக்குவேறு

தெற்குவேறு

வடக்கு வஞ்சனையுடன் நடந்துவருகிறது.

வடக்கே, பணம் விரயமாகிறது.

தெற்கு ராஜ்ய அலுவலில் வடக்கு, அனுவசியமாகக் குறுக்கிடுகிறது.

வடக்கு குறுக்கிடும் போக்கை, தெற்கு எதிர்த்துப் போரிடவேண்டும்.

அந்தக்காலம் விரைவில் வருகிறது.

இவ்வளவும், சுரங்கத்துள் தூங்கும் தங்கம் போலவோ, கடலுக்குள் உறங்கும் முத்துபோலவோ கூட அல்ல, தோலுக்குள் இருக்கும் சுளைபோலவோ, நெல்லுக்குள் இருக்கும் அரிசிபோலவோ, இருக்கிறதா இல்லையா என்று கேட்டுப்பார்.

குமாரசாமிராஜா இந்த அளவு எடுத்துக் கூறியது எனக்கென்னமோ, கை சுளுக்குடன் கஷ்டப்படும் கந்தப்பனுக்கு வலி போக்கிக்கொள்ளக்கிடைக்கும் பச்சிலைத் தைலம் போலத் தோன்றுகிறது. இதுவாவது கிடைக்கிறதே என்று மகிழக்கூடத் தோன்றுகிறது.

கவர்னர் பதவியிலிருந்து விலகியதும், இது குறித்து, மேலும் பல உண்மைகளை, விஷயங்களை நான் கூறுகிறேன்—என்று குமாரசாமிராஜா கூறுகிருர்.

இதற்குள், தூதும், சமரசப் பேச்சும், ஆகாது கூடாது, அவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள், இவர்கள் ஏளனம் செய்வார்கள் என்றெல்லாம் எடுத்துக் கூறும் பாசவலையும் வீசப்பட்டிருக்கும்.

அத்தனைக்கும் தப்பி வந்து ஆற்றலுடன், குமாரசாமி ராஜா அவர்கள், வடக்கு கொண்டுள்ள கோலத்தையும் போக்கினையும் மக்கள் மன்றத்தில் அம்பலப் படுத்தி, வடக்கு செலுத்தும் ஆதிக்கத்தை எதிர்த்து, ஏன் என்று கேட்கும் வீரத் தலைவராக வெளிவர வேண்டும்.

முடிகிறதோ இல்லையோ, இப்போதைக்கு இந்த அளவுக்கேனும் அஞ்சா நெஞ்சுடன் உண்மையை எடுத்துரைத்த நேர்மையைப் பாராட்டத்தானே வேண்டும்.

செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அறைத்திடும் கந்தப்பனுக்கு, கை சுளுக்குப் போக, எருக்கம் பாலும் களிமண் பூச்சும் மட்டுமல்ல, பச்சிலைத் தைலமும் சிறிதளவு கிடைக்கிறதென்றால், கொஞ்சம் நிம்மதிதானே!

அந்தவிதமான மகிழ்ச்சி நமக்கு, ராஜாவின் பேச்சு கேட்டதில்; வாழ்க அவர்தம் வாய்மைப் பற்று! வளர்க அவர்தம் அஞ்சாமை என்று நீயும் நானும் வாழ்த்துவோம, தம்பி! வேறு என்ன இருக்கிறது நம்மிடம், அவருக்கு அளித்திட.

**அன்பன்,**

அண்ணாதுரை

# உலக அரங்கில்

## எகிப்து

*

சூயஸ் கால்வாய் சம்பந்தமாக எகிப்து நாசருடன் பேச்சு வார்த்தை நடத்த இலண்டன் மாநாட்டில் நியமிக்கப்பட்ட ஐவர் குழு, இப்போது எகிப்தில் இருக்கிறது. பிரச்னை தீரும் நம்பிக்கையேற்பட்டிருப்பதாக குழுவின் தலைவர் மென்சிஸ் தெரிவித்துள்ளார். குழு வந்திருக்கும் இச் சமயத்தில், எகிப்து முழுமையும் படை திரட்டும் முயற்சிகளும் தீவிரமாகவே செய்யப்பட்டு வருகிறது.

பிரான்சிலிருக்கும் சூயஸ் கால்வாய் கம்பெனியின் சொத்துக்களை முடக்கி நடவடிக்கையெடுக்கவும் இச்சமயத்தில் எகிப்து யோசித்து வருகிறது. மேற்படி கம்பெனி முதலாளிகள், பிரான்சிலிருக்கும் பத்திரிகைகளுக்குப் பணம் கொடுத்து எகிப்துக்கு விரோதமான பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனவாம்.

*

## பிரிட்டன்

*

சூயஸ் பேச்சில் முறிவு ஏற்பட்டால் உடனே எகிப்து மீது படையெடுக்கவேண்டும் என்றொரு கூப்பாடு இலண்டனில்இருந்து வருகிறதல்லவா? இதைக் கண்டித்தும்,அப்படி பேச்சு வார்த்தை முறிந்தாலும், ஐ. நா. சபையின் சம்மதமின்றி எதுவும் செய்யக் கூடாதெனவும் பிரிட்டனிலுள்ள பத்து லட்சம் தொழிலாளர்களைக் கொண்ட தொழிற் சங்க காங்கிரஸ் இந்த கிழமை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த முடிவு, பிரிட்டிஷ் மக்கள் சூயஸ் பற்றி கொண்டிருக்கும் கருத்தினை எதிரொலிப்பதாகக் கருதப்படுகிறது.

*

## ஆப்கானிஸ்தானம்

*

48 கோடி ரூபாய்க்கு மேல் இந்த ஓராண்டில் ஆப்கானிஸ்தானத்துக்கு ரஷ்யாவிலிருந்து அளிக்கப்பட்டிருக்கிறதாம். காபூலில் நடைபெறும் தொழிற் கண்காட்சியில் பங்கேற்றிருக்கும் ரஷ்ய அதிகாரி இச் செய்தியை வெளியிட்டுள்ளார். கடந்த ஐந்தாண்டுகளுக்குள் இரு நாடுகளுக்குமிடையே ஆறு மடங்கு வியாபாரம் பெருகியுள்ளதாம்.

ரஷ்யாவிடமிருந்து கிடைக்கும் இத்தொகையைக்கொண்டு பலவித ஆலைகளை அமைக்க ஆப்கானிஸ்தானம் திட்டமிட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

*

## தென் வியட்நாம்

*

வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்களைக் கொண்டுவந்து இந்தியாவில் 'பாடி' கட்டி பவனிவிடப்படுகிறதல்லவா, ஏராளமான கார்கள்! இவைகளை இங்கிருந்து வாங்கிச் செல்லப்போகிறதாம், தெற்கு வியட்நாம். இது சம்பந்தமாக நேருவை இந்தக் கிழமை சந்தித்து பேசியிருக்கிறார்கள். இது நிறைவேறுமானால், கார் கம்பெனிகள் நடத்தும் டாடாக்களுக்கும் பிர்லாக்களுக்கும் யோகம்தான்! தென் வியட்நாமில், மின்சாரக் கருவிகள், தையல் இயந்திரங்கள், முதலியவைகளுக்கு நல்ல கிராக்கியாம். வியட்நாமில் அரிசி, மூந்திரி, இரப்பர், தேக்கு முதலியவைகள் தான் முக்கிய விளைபொருள்கள்.

*

## புது தீவுகள்

*

சீனாவுக்குக் கிழக்கே கடலில் அண்மையில் சில புது தீவுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இத் தீவுகள் தமக்குத்தான் சொந்தமென்று தெற்கு வியட்நாம், சீனா, பிரான்ஸ், பார்மோசா முதலிய நாடுகள் மட்டுமல்ல பிலிப்பைன்சைச் சேர்ந்த டோமாஸ்கலோமா எனும் வழக்கறிஞரும் உரிமை கொண்டாடி வருகிறார்! இந்நிலையில் கடந்த கிழமை சில விமானங்களை, அத் தீவுகளுக்கு (ஸ்பார்ட் லீ தீவுகள்) தென் வியட்நாம் அனுப்பிற்றும். இதை ஆட்சேபித்து, இன்றோ நாளையோ என அல்லாடும் பார்மாசோ, கண்டனக் குரல் எழுப்பியுள்ளது இந்த கிழமை!

*

## இலங்கை

*

இலங்கையும் ருஷ்யாவும் தத்தமது அரசுத் தூதர்களைப் பரிமாறிக்கொள்ள முடிவு செய்துள்ளன. கொத்தலாவலேயின் ஆட்சியில், இலங்கை அமெரிக்க சார்புள்ள நாடாகக் கருதப்பட்டு வந்தது. இப்போதைய பிரதமர் பண்டார நாயகா அந்த மனோபாவத்தை மாற்றுவதற்காகச் செய்யப்படும் பல காரியங்களில் இதுவும் ஒன்றெனக் கருதப்படுகிறது. ஆனால் இப்படியெல்லாம் செய்யும் பண்டார நாய்காவால், உள்நாட்டில் குமுறும் தமிழினத்துக்கு நீதி வழங்க முடியவில்லை. இதனை, இந்த கிழமையும் தமிழ்த் தலைவர்கள் கூடி கண்டித்துள்ளார்கள்.

*

## அமெரிக்கா

*

டெலிவிஷன் மூலம் பள்ளிக் கூடங்கள் நடத்தப் போகிறார்களாம் அமெரிக்காவில்! அங்குள்ள ஆசிரியர் பற்றாக்குறையின் காரணமாக இம்முறை பின்பற்றப்படவிருக்கிறதாம். இந்த முறை, முதன் முதலில் ஹேகர்ஸ்டவுன் எனும் ஊரில் அமுல் நடத்தப்பட இருக்கிறது. முதன் முதலில் டெலிவிஷன் மூலம் எட்டு பள்ளிகளுக்குப் பாட போதனை செய்யப்படுமாம். பிறகு ஈராண்டுகளில் அந்த வட்டாரத்திலுள்ள 47 பள்ளிகளுக்கும் விரிவாக்கப்படுமாம்! பள்ளி மாணவர்கள் எதிரேயிருப்பது போல நினைத்துக்கொண்டு ஆசிரியர்கள் வகுப்புகளை நடத்த வேண்டி நேரும், இனி.

*

## ரஷ்யா

*

அணுசக்தியைக்கொண்டு ரஷ்யாவில் கப்பலொன்று கட்ட இருக்கிறார்கள். இக் கப்பல், பனிக்கட்டியாக உறைந்து போயிருக்கும் பகுதியில், சிரமமின்றிச் செல்லுமாம். அணுசக்தியின் மூலம் இயக்கப்படும் இக் கப்பல் நுழைந்ததும் பனி உருகி இளகி விடுமாம். இதனால், பனிப் பிரதேசமான வட துருவத்துக்குச் சுலபமாகப் போய் வரக்கூடுமெனக் கருதப்படுகிறது.

*


REGD. NO. M. 4642 போன் நெ. 15

# பெங்குவின்

பார்ப்பதற்கே வேடிக்கையாக இருக்கும்; பறவை இனத்தைச் சேர்ந்ததுதான், என்றாலும் பறக்கத் தெரியாது, இயலாது. சின்னஞ்சிறு சிறகுகள் இருக்கும் செதில்கள்போல். ஆனால் பறக்கப் பயன்படும் இறகுகள் கிடையா. மனிதனைப்போல் நிமிர்ந்து நிற்கும் இயல்பு உண்டு. நின்ற பின்னர் நிலைக்கும் உயரம் மூன்றடி; ஒன்றிரண்டு அங்குலங்கள் இப்படியும் அப்படியும் இருக்கும். கைகள் போல்தான் தோன்றும் ஆனால் அவை கைகள் அல்ல. தண்ணீரைத் தள்ளி நீந்தப் பயன்படும் துடுப்புக்கள் தான் தோலுக்குக் கீழே கனமான நிணம்—கொழுப்பு —இருக்கும் உடல் எங்கும். கொட்டும் பனி, கடுங்குளிர் தாங்கும் வன்மை தருவது அது. கூரிய மூக்கு. இதுதான் பெங்குவின் பறவை. மனிதன் செல்லத் துணியாத துருவப் பிரதேசத்தில் குளிர்ப்பகுதியில் இந்தப் பறவைகள் ஏராளம். ஏராளம் என்பது நூற்றுக் கணக்கைச் சொல்வது அல்ல; ஆயிரக்கணக்கைப் பல்லாயிரக் கணக்கைக் குறிப்பிடும்.

தென் பசுபிக் பெருங் கடலில் உள்ள மாக்கொயர் (Macquarrie) என்ற தீவில்தான் இவை மிகுதியாகக் காணப்படுகின்றன. இவை எங்கு சென்றாலும் பெருங் கூட்டமாகச் சேர்ந்தே செல்லுமாம். பெருங் கூட்டத்திலும் இளமை, வாலிபம், வயோதிகம், ஆண், பெண், என்ற தனித் தனித் தொகுதிகள் இருக்கும் என்றும் ஒன்றுடன் மற்றொன்று கலப்பது கிடையாது என்றும் கூறுகின்றனர் கண்டறிந்தவர்கள்.

படைவீரர் பட்டாளத்தில் அணிவகுத்து நிற்பது போல் காணப்படுமாம் அவை வரிசை வரிசையாக வகுத்து நிற்பது.



பறவைகள் என்றாலும் அவை 'இல்லறம் நடத்துவதில் தேர்ந்தவை ஆகும். ஆணும்' பெண்ணும் அன்புடனும் பொறுப்புணர்ச்சியுடனும் காணப்படுகின்றனவாம். இட்ட முட்டையைக் கால்களுக்கு இடையில் வைத்து அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் வேலை பெண் பறவையினுடையது. பெண் அந்த வேலையில் ஈடுபட்டிருக்கும்போது ஆண் பறவை அலைந்து திரிந்து உணவு கொண்டுவந்து தரும், பிற உதவிகளையும் செய்யும்.

இவை தரையிலும் தண்ணீரிலும் வாழ வல்லவை என்றாலும் தண்ணீரில்தான் இவற்றின் தன்மைகள் சிறந்து காணப்படுகின்றன.

கைகள் போன்ற துடுப்புக்களால் தண்ணீரை அடித்து அடித்துச் செல்லுவதும் மேலெழுந்து துள்ளுவதும், கீழ் மூழ்கி வெளி வருவதும் இவற்றினுக்கு இயல்பான செயல்கள்; இரை தேடும் முறையும் இதுதான்.

இவை பெரும்பாலும் நீரில் வாழும் மீன் முதலியவற்றையே நம்பி உயிர் வாழுகின்றன.

பெற்ற குஞ்சுகள் உற்ற வயது அடையும் வரை உணவு ஊட்டிப் பாதுகாக்கும் பணியை தாய்ப் பறவை மிக்க கவனத்துடன் செய்கிறது. "உணவு இருக்கிறது வரலாம்" என்றுகூறுவது போலக் குரல் எடுத்துக் கூவி நின்றதும் சிறு பறவை தாயை நோக்கி வரும். அது வந்ததும் தாய்ப் பறவை தன் வாயைத் திறந்து தலையைத் தாழ்த்தும். சிறியது தன் அலகைத் தாயின் வாயில் வைத்து அங்கு இருக்கும் உணவை உண்ணும்.

துடுப்புகள் போன்ற கைகளை இவை நீரில் பயன்படுத்துவதோடு நிலத்திலும் சில நேரங்களில் பயன்படுத்துகின்றன, நிமிர்ந்து நிற்காமல் முன்னிரண்டு கைகளையும் தரையில் ஊன்றித் தவழ்ந்து செல்லும் வேகத்தைக்காண்பவர்கள் இதனைப் பறவை என்று விலங்கென்றே கூறுவராம், அவ்வளவு விரைவாக நடக்கவும் வல்லவை இவை.

மனிதநடமாட்டமே இல்லாத துருவப்பிரதேசங்களில்மட்டுமே வாழுகின்றன என்றாலும், எங்கு எது இருப்பினும் அதனைக் கண்டறிந்துவிடவேண்டும் என்ற பேரவா உடைய மனிதன் இதனையும் கண்டதுடன் அதன் இயல்புகளையும் பண்புகளையும் தெளிவாக அறிந்திருக்கிறான்.

பெரும்பாலும் பயண நேரத்தில் படிக்க என்று பேரிலக்கியங்களையும் நன்னூல்களையும், எளிய விலையில் சிறிய அளவில் வெளியிடும்முறை ஆங்கில இலக்கியஉலகில்உள்ளது. அவ்வகை நூல்கள்வெளியிடும் பதிப்பகங்களில்இந்தப்பெங்குவின்பெயரால் அமைந்துள்ள நிலையமும் ஒன்று. படிப்புக்கும் இவற்றினுக்கும் என்ன தொடர்போ தெரியவில்லை!

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
[illegible] அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.